GOKULAM

கோகுலம்

அக்டோபர் '98 ரூ.6.00




சிறுவரும் சமைக்கலாம் பாதுகாப்பாய் இருக்கலாம்!

இரண்டு படங்களுக்கும் உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை: 1.முருங்கை, 2. குழந்தையின் சட்டை பட்டன், 3. அவரைக்காய், 4. டம்ளர், 5. வாழைக்காய், 6. திராட்சைப் பழம், 7. அம்மாவின் பொட்டு.




கிறிஸ்தவர்கள் ஆண்டவனிடம் துதிக்கும் போது கடைசியில், 'ஆமென்' என்று சொல்லி முடிப்பார்கள். 'ஹீப்ரு' விலிருந்து 'ஆமென்' என்ற சொல் உருவாகியது.

தெரியுமா உங்களுக்கு? என்ற நூலில் இருந்து

—எல். கோபாலகிருஷ்ணன்

குடும்பத்துடன் எங்கே கிளம்பியாச்சு?



புதிர் ஒரு எண்ணை 10 ஆல் வகுத்தால் மீதி 9 வரும். 9 ஆல் வகுத்தால் மீதி 7 வரும். 7 ஆல் வகுத்தால் மீதி 6 வரும். 6 ஆல் வகுத்தால் மீதி 5 வரும். 5 ஆல் வகுத்தால் மீதி 4 வரும். 4 ஆல் வகுத்தால் மீதி 3 வரும். 3 ஆல் வகுத்தால் மீதி 2 வரும். 2 ஆல் வகுத்தால் மீதி 1 வருமெனில் அந்த எண் என்ன?

- எம். வினோத், விருத்தாசலம்

விடை: 2519

"அவர் சரித்திரக் கதைகள் எழுதுகிறவர்!"

"அதுக்காக வீட்டு வாசலில் அழைப்பு மணிக்கு பதிலா ஆராய்ச்சி மணியைக் கட்டித் தொங்க விடறதா?"

- டி.என். பாலகிருஷ்ணன், மடிப்பாக்கம்



பிருந்தாவனம்



கோகுலம்



அக்டோபர் 1998 மலர்: 16 இதழ்: 9

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் தாத்தா, பாட்டி உங்களுக்குக் கதை சொல்வார்களா? அடுத்த தடவை அவர்களிடம், ''அமரர் 'கல்கி' எழுதிய கதை சொல்லு!'' என்று கேட்டுப் பாருங்கள்!

'கல்கி' அவர்கள் எழுதிய 'பார்த்திபன் கனவு,' 'சிவகாமியின் சபதம்' ஆகிய கதைகள், படிப்பதற்கு மட்டுமல்ல, உணர்ச்சிகளோடு சொல்வதற்கும் ஏற்றவை. ராமாயணம், பாரதம் போல திரும்பத் திரும்பக் கேட்கலாம்; படிக்கவும் செய்யலாம்.

இன்னும் சொல்லப் போனால் 'கல்கி' அவர்களே 'பொன்னியின் செல்வன்' கதையை முதலில் அவருடைய மகனாகிய எனக்கும் எனது சகோதரிக்கும் சொல்லத்தான் செய்தார். எங்களுடைய முக பாவங்கள் மூலமே கதைப் போக்கின் சுவாரஸ்யத்தை எடை போட்டுக் கொண்டார். பிறகுதான் எழுத ஆரம்பித்தார்!

குழந்தைகளிடம் அவருக்கு ரொம்பப் பிரியம். அவர்கள் படித்து ரசிக்க முடியாத எதையும் பெரியவர்களுக்கும் எழுதத் தேவையில்லை என்று கருதியவர். அவர் காலமாகி 44 ஆண்டுகளுக்குப் பிறகும் கல்கியில் நான்காவது தடவையாக 'பொன்னியின் செல்வன்' தொடராகப் பிரசுரமாகும் இப்போது, இன்றைய இளம் தலைமுறையினரும் படித்து மகிழ்கிறார்கள்!

கிருஷ்ணமூர்த்தி என்பது அவரது பெயர். 'கல்கி' என்ற தமது புனை பெயரையே 57 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் தொடங்கிய தமது பத்திரிகைக்கும் சூட்டினார். அதிலே குழந்தைகளுக்கு என்று சில பக்கங்கள் ஒதுக்கி அதனைப் ''பாப்பா மலர்'' என்று அழைத்தார். அந்தச் சில பக்கங்கள் தாம் பல்கிப் பெருகி, இன்று கோகுலம் என்ற தனி இதழாக குழந்தைகளுக்காகப் பிரசுரமாகிறது. இதனைத் தோற்றுவித்தவர் 'கல்கி' அவர்களின் அருமை நண்பர் சதாசிவம்.

'கல்கி' ஓர் எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் மட்டுமல்ல; சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்ற தியாகி. உயர் நிலைப் பள்ளியில் முதல் தர மாணவராக விளங்கிய அவர், இறுதிப் பரீட்சைக்குச் சில காலம் இருந்த போது, காந்தி அடிகளின் கட்டளையை ஏற்று, கலாசாலையை விட்டு வெளியேறினார். தமது எதிர்காலத்தை தேசப் பணிக்கே அர்ப்பணித்தார்.

'நாடு சுதந்தரம் பெற்றால் போதாது; மக்கள் சுதந்தரத்துக்குத் தகுதி பெற்றவர்களாகத் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்' என்று விரும்பினார் காந்திஜி. அதற்காகப் பல நிர்மாணத் திட்டங்களை வகுத்தார். அவை ஒவ்வொன்றிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அரும் தொண்டாற்றினார், 'கல்கி'.

இப்போது அமரர் 'கல்கி' அவர்களுடைய நூற்றாண்டு, 9.9.98ல் ஆரம்பமாகியிருக்கிறது. 9.9.99ல் நிறைவு விழா விமரிசையாக நடக்கும்.

ஆனால் மிகச் சிறந்த முறையில் அவரை நாம் எப்படி கொண்டாடலாம் தெரியுமா? ஒவ்வொரு காரியத்தைச் செய்யும்போதும் 'இது தேச நலனுக்கு உகந்ததா?' என்று யோசித்துச் செயல்பட்டார் 'கல்கி.' அந்தக் கொள்கையை நாமும் கடைபிடிப்பதுதான் அவருக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலியாகும்.

'தேச நலன்' என்ற அந்த மந்திரச் சொல்லை மறவாதிருப்போம்!

அன்புடன்

கி. ராஜேந்திரன்


ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

கோகுலம்

அக்டோபர் 1998


இந்த இதழில்...







அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவுகளும், பரிசு பெற்ற முதல் கதையும் அடுத்த இதழில் பிரசுரமாகும்.


மணி பர்ஸ்
கதை: திருவாழத்தான்
படம்: "சிஜு"
முரளி படிப்பில் கெட்டிக் காரன். அன்று பள்ளி மைதானத்தில் –
ஆ! மணி பர்ஸ்! யாருடையதோ?
ஹை! மூனு நூறு ரூபாய்!
பர்ஸை பையில் போட்டுக்கொண்டான்.. முரளிக்கு ஒரே குஷி –
என்ன வாங்கலாம்? சாக்லெட், கேக், கதைப் புத்தகம்.. என்னென்னவோ...!
நண்பன் ரகு எதிரே வந்ததைக் கூட முரளி கவனிக்க வில்லை –
என்னடா முரளி இன்னிக்கு ஒரே ஜாலியா இருக்கே?
சும்மாத் தான்...
ஒண்ணு மில்லே....


என்னமோ தெரியல்லெ.. ம்... சரி.. சரி இன்னிக்கு முதல் பீரியட் கணக்குலெ புதுப்பாடம்... இவர் ஜாலிலெ பாடத்தைக் கோட்டை விட்டோருதே!
வகுப்பில்
டேய் மூளி, என்னடா பண்றே? பாடத்தைக் கவனிக்காமே?
புதிய பாடத்தில் டீச்சர் கேள்வி கேட்க, மூளி விழிக்கி றான்–
!
?
இந்த வகுப்பு முழுவதும் இப்படியே நின்னுக்கிட்டே கவனி!



அடுத்த பீரியட் ஆங்கிலம்.
சே! எவ்வளவு கஷ்டப் பட்டு முயற்சி செய்தாலும் பாடத்தைக் கவனிக்கவே முடியலையே!...
வகுப்புகள் முடிந்தவுடன்...
எல்லாம் இந்த நூறு ரூபாய் நோட்டால் வந்த வினை. இது எனக்கு வேண்டாம்!
முரளி மணிபர்ஸை கையில் எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியர் அறையை நோக்கி நடந்தான்!

கிரிக்கெட்

அவர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று ஐம்பது ஆண்டுகள் ஓடி விட்டன. இருப்பினும் இன்றும் அவர் உலக கிரிக்கெட் ரசிகர்களின் 'உள்ளம் கவர்ந்தவர்'. அவருடைய ரன் சராசரி - நம்பினால் நம்புங்கள் - 99.94! அவர்தான் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் சர் டோனால்ட் ஜார்ஜ் பிராட்மேன்.

'டான்' என்று செல்லமாக அழைக்கப்படும் பிராட்மேன் 1908ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 அன்று பிறந்தார். அண்மையில் தமது 90 ஆவது பிறந்த நாளின் போது 'தன்னைப் போலவே' ஆடும் விட்டில் மாஸ்டர் சச்சின் டெண்டுல்கரை அழைத்து விருந்தளித்தார்.

சச்சின் சொல்கிறார். "நான் கிரிக்கெட் ஆடத் தொடங்கிய வேளையில், யாராவது நன்றாக விளையாடினால் மற்றவர்கள் அவரைப் பார்த்து 'நீ என்ன பெரிய பிராட்மேன்னு நினைப்பா?' என்று கேட்பது வழக்கம். நான் அந்த மாபெரும் ஆட்டக்காரரின் ஆட்டத் திறனை வீடியோக்களிலும், நூல்களிலும் மட்டுமே கண்டிருக்கிறேன். அவை எனக்கு உற்சாக மூட்டின; கற்றுக் கொள்ள உதவியாக இருந்தன.


''சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்த பிறகுதான் 'டான்' அவர்களின் திறமையை முழுமையாக அறிந்தேன். அவருடைய ஆட்டத் திறனும் துணிச்சலும் நிகரற்றது.



சாம்ப்ராஸை வீழ்த்தினார் பயஸ்!

இதுவரை அவர் ஆடிய ஆட்டங்களிலேயே சிறப்பான ஆட்டத்தை அன்று ஆடினார் பயஸ். அதன் விளைவு உலகின் இரண்டாவது இடத்திலிருக்கும் பீட் சாம்ப்ராஸை நூறாவது இடத்திலிருக்கும்

தாத்தா!



• டான் பிராட்மேன், டெண்டுல்கர்

அவருடைய ரன் சராசரியோ வேறு யாராலும் அடைய முடியாதது.''

தற்போது சச்சினையும் பிராட்மேனையும் பலர் ஒப்பிடுகின்றனர். இது பற்றி சச்சின் என்ன நினைக்கிறார்? "இது போன்ற ஒப்பீடுகளை நான் நம்புவதில்லை. நான் என் ஆட்டத் திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்தி வருகிறேன். மக்கள் என்னைப் பெரிதும் விரும்புகின்றனர். அவர்களின் அன்பும், நல்வாழ்த்துகளும் இந்தியாவிற்காக நன்கு விளையாட எனக்கு உதவுகின்றன.

"டான் பிராட்மேனைப் போல இன்னொரு ஆட்டக்காரர் இருக்கவே முடியாது. எல்லோரிலும் சிறந்தவர் அவரே!" என்கிறார்

சர் டான் பிராட்மேன் தன்னை அழைத்து கிரிக்கெட் நுட்பங்கள் பற்றிப் பேசியதை பெரும் பாக்கியமாகவே கருதுகிறார் சச்சின். சரி, இவரைப் பற்றி அந்த மாமேதை என்ன கூறுகிறார் தெரியுமா?

''டெண்டுல்கர் என்னைப் போல, நான் ஆடிய முறைகளிலேயே ஆடுவதாக எண்ணுகிறேன். இதை விரிவாக விளக்க என்னால் இயலாது. சச்சினின் கச்சிதம், மட்டை வீச்சு, நுட்பம் – இவையெல்லாம் என்னை வியக்கச் செய்கின்றன."

சச்சின் சொல்வதைப் போல ரன் மெஷின் டான் பிராட்மேன் ஒப்பிட இயலாதவர்; நிகரற்றவர்.

- தன் அணி பெற்ற ரன்களில் 25.47 சதவீத ரன்களை பிராட்மேனே சேர்த்திருக்கிறார். இது டெஸ்ட் ஆட்டங்களில் 26.03 சதவீதம்
- 80 இன்னிங்ஸ் டெஸ்ட் ஆடிய வலது கை ஆட்டக்காரர் பிராட்மேன். 51 ஆட்டங்களில் மட்டுமே நூறுக்கு குறைவு. 29 ஆட்டங்களில் நூறுக்கும் அதிகம். 12 ஆட்டங்களில் இருநூறையும் தாண்டி ஆடினார்.
- சராசரியாக நூறு ரன்கள் சேர்க்க அவருக்குத் தேவையான நேரம்: 2 மணி 46 நிமிடங்கள் மட்டுமே.
- 1931 இல் நடைபெற்ற ஒரு சிறப்பு ஆட்டத்தில் 22 பந்துகளை மட்டுமே சந்தித்து 100 ரன்களை எட்டினார்.
- இந்தியாவுடன் 5 டெஸ்ட்களில் 6 இன்னிங்ஸ் ஆடி நான்கு நூறு

லியாண்டர் பயஸ் வீழ்த்தினார். ஆகஸ்ட் 21 அன்று ஏடிபி சாம்பியன்சிப் தொடரில் இவ்வெற்றி லியாண்டரின் கைவசமாயிற்று. டென்னிஸ் – உலக தரப்பட்டியலில் திடீரென 25 இடங்களைத் தாண்டி 75 ஆவது இடத்தையும் பிடிக்க முடிந்தது. ''இது ஒரு மாபெரும் வியப்புக்குரிய வெற்றி'' என மகிழ்கிறார் பயஸ். ''என்னுடைய ஹீரோவை நானே வென்றதன் மூலம் என் கனவு நனவானது. ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றேன். அதுபோல, இவ்வெற்றியும் இந்தியாவிற்காக விளையாடும் என்னை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளது'' என்று பூரிக்கிறார். லியாண்டரின் வெற்றிகள் தொடரட்டும்!

பிராட்மேனின் கிரிக்கெட் டேட்டா

	டெஸ்ட்	முதல் தர கிரிக்கெட்
ஆட்டங்கள்	52	234
இன்னிங்ஸ்	80	338
ஆட்டமிழக்காதவை	10	43
ரன்கள்	6996	28,067
50'கள்	13	69
100கள்	29	117
அதிக பட்சம்	334	452*
சராசரி	99.94	95.14
		* ஆட்டம் இழக்காதவை

களையும் ஒரு ஐம்பதையும் பெற்றிருக்கிறார்.

- 1936-48 களில் ஆஸ்திரேலிய கேப்டனாக இருந்த பிராட்மேன் பங்கேற்ற 24 டெஸ்ட்களில் 15இல் வெற்றி; 6 ஆட்டங்கள் டிரா; 3இல் மட்டுமே தோல்வி.
- 1948இல் இங்கிலாந்தோடு ஆடிய டெஸ்ட்தான் பிராட்மேனின் இறுதி ஆட்டம். அதில் 4 ரன்கள் சேர்த்திருந்தால் டெஸ்ட் ரன்களின் எண்ணிக்கை 7000 ஆகவும், சராசரி 100 ஆகவும் மாறியிருக்கும். ஆனால் அவர் ரன் ஏதும் எடுக்காமலேயே இரண்டாவது பந்தில் ஆட்டமிழந்தார்.

முரளிதரனின் 'மாஜிக்' வீச்சு!

ஆகஸ்ட் மாதம் இலங்கை, இங்கிலாந்து அணியோடு ஒரே ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் பங்கேற்றது. இலங்கை ஆட்டக்காரர் முத்தையா முரளிதரனின் அற்புத 'சுழற்' பந்து வீச்சில் இங்கிலாந்து அணியின் 16 விக்கெட்டுகள் சுருண்டன. வெற்றியும் இலங்கை அணியின் கைவசமாயிற்று. அது மட்டுமல்ல - தன் இருநூறாவது விக்கெட்டையும் இந்த டெஸ்டிலேயே பெற்று சாதனை படைத்தார் முரளி.



• முரளிதரன்


டெஸ்ட் ஆட்டத்தில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்களில் ஐந்தாவது இடத்தைப் பிடித்திருக்கிறார் அவர். இதோ முதல் ஐந்து வீரர்கள்

1. ஜே. லேகர் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா (1956) 19-90
2. எஸ். பேர்ன்ஸ் இங்கிலாந்து - தென் ஆப்பிரிக்கா (1913) 17 - 159
3. என்.ஹிர்வானி இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (1987) 16-136
4. ஆர். மாஸ்லி ஆஸ்திரேலியா - இங்கிலாந்து (1972) 16-137
5. எம். முரளிதரன் இலங்கை - இங்கிலாந்து (1998) 16-220

இரண்டாவது இன்னிங்சில் முரளியின் 9 விக்கெட்டுகளுக்கு 65 ரன்கள், அவரை ஒரே இன்னிங்சில் அதிக விக்கெட்டுகள் எடுத்த பட்டியலில் ஏழாவது இடத்தில் சேர்த்திருக்கிறது.

இச்சாதனை மூலம் சியட் உலக கிரிக்கெட் தரப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து விட்டார் முரளிதரன்.

- விளையாட்டுப் பையன்



ஏது முக்கியம்?

சந்தோஷம், செல்வம், அறிவு மூன்றும் கூடி விவாதம் செய்து கொண்டிருந்தன.

"நான்தான் எல்லாவற்றையும் விட முக்கியமானவன்" என்று ஜம்பமடித்துக் கொண்டது செல்வம்.

"சந்தோஷம் இல்லாவிட்டால், செல்வத்தால் என்ன பலன்?" என்று ஆட்சேபித்தது சந்தோஷம்.

"அறிவு இல்லாமல், செல்வமும், சந்தோஷமும் இருந்தால் அவை பயன் படா" என்றது அறிவு. அவை இவ்வாறு வெகு நேரம் வாதப் பிரதிவாதம் செய்து கொண்டிருந்தன. பிறகு யார் சொல்வது சரி என்பதைக் காண முடிவு செய்தன. மூன்றும் ஒரு துண்டு நிலத்தில் மக்கர்ச் சோளம் விதைத்துக் கொண்டிருந்த ஓர் ஏழை இளைஞனிடம் வந்து சேர்ந்தன.

அறிவு, சந்தோஷம், செல்வம் ஆகிய மூன்றும் அங்கு சிறிது நேரம் தாமதித்தன.

"இந்த ஏழையின் நிலம் முழுவதிலும் தங்கக் கட்டிகள் குவியட்டும்" என்று தனது கையைத் தூக்கியபடி கூறிற்று செல்வம்.

உடனே, ஏழையின் நிலமெல்லாம் தங்கக் கட்டிகள் நிறைந்து விட்டன; ஆனால், அறிவானது தனது சக்தியைக் காட்ட விரும்பிற்று. எனவே, அந்த ஏழையிடமிருந்து அது வெளியேறிற்று. அதனால் அவன் தன் அறிவை இழந்து விட்டான். அந்தத் தங்கக் கட்டிகளை சாதாரணமான கற்கள் என்று நினைத்து விட்டான்.

"என்ன கொடுமையிது! என் கழனி முழுவதும் கல் மழையாகப் பொழிந்து மூடிக் கொண்டு விட்டதே!" என்று கூச்சலிட்டபடி ஊராரிடம் இதைப் பற்றிச் சொல்லுவதற்காக ஓடினான்.

முதலில் அவன், பண்ணையார் ஒருவரை சந்தித்தான்.

"நான் வந்து பார்க்கிறேன்" என்று சொன்னார் அவர். கழனிக்கு வந்ததும் அங்கு கொட்டிக் கிடந்த தங்கத்தை அவர் கண்டார். உடனே, நிலச் சொந்தக்காரனான அந்த இளைஞனிடம், "இதோ பார், எனக்கு ஏரானமான செழிப்பு மிக்க நிலங்கள் இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா?

ஏ.ஆர்.என். துரைராஜ்

ஆகையால் நான் உனக்கு உதவி செய்கிறேன். என்னிடம் உள்ள அருமையான நிலம் ஒன்றை நீ எடுத்துக் கொள்; கல்லும் கரடுமாகக் கிடக்கிற இந்தப் பூமியை நான் வைத்துக் கொள்கிறேன்'' என்றார் பண்ணையார்.

அந்த இளைஞன் அளவற்ற மகிழ்ச்சியுடன் அதற்குச் சம்மதித்தான். பண்ணையார் அந்தப் பூமியில் கிடந்த தங்கத்தையெல்லாம் சேகரித்துப் பெரிய வண்டிகளில் கொண்டு சென்றார். ஏழை தனது புதிய நிலத்தில் உழ ஆரம்பித்தான்.

இதைப் பார்த்த சந்தோஷமானது தனது ஆற்றலைப் புலப்படுத்த விரும்பி அந்த ஏழை மேல் கடைக்கண் வைத்து, "நீ சந்தோஷமாக இரு'' என்று ஆசி கூறிற்று."

இப்படி சொல்லி முடித்ததோ, இல்லையோ உடனே ஒரு பட்டாளம் அந்த இளைஞனைத் தேடி அங்கு வந்து சேர்ந்தது.

"நாங்கள் வெகு காலமாக எங்களுக்கு ஒரு தலைவனைத் தேடிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் எங்கள் படைத் தலைவனாக இருக்க இசைய வேண்டும்'' என்று அந்தப் படையினர் இளைஞனை கேட்டுக் கொண்டனர்.

அறிவை இழந்து விட்ட அந்த ஏழைக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தன் தலையை மட்டும் ஆட்டினான். படை வீரர்கள் அவனுக்கு வெள்ளிக் கவசம் ஒன்றையும் அணிகலன்களையும் வழங்கி ஒரு கறுப்புக் குதிரை மீது அமர்த்தி அழைத்துச் சென்றனர். அப்போது யாராலும் அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு அவன் அழகுடன் காணப்பட்டான்.

அந்தப் படை அன்று இரவு ஒரு கிராமத்தில் தங்கிற்று; அக்கிராமம் இந்த ஏழையின் பொன் நிறைந்த பூமியை வாங்கிக் கொண்டு தன் பூமியை மாற்றிக் கொடுத்த பண்ணையார் இருக்கும் கிராமம். அவருக்கு அழகில் சிறந்த புதல்வி ஒருத்தி இருந்தாள்.

இந்தப் பண்ணைக்காரரின் மகளை நமது படைத் தலைவருக்குத் திருமணம் செய்து வைக்கலாமே'' என்று படை வீரர்கள் கூறினர். பண்ணைக்காரர் அதற்கு ஒப்புக் கொண்டார். திருமணம் நிச்சயம் செய்யப் பெற்றது. இதைக் கொண்டாடுவதற்காக அளிக்கப்பட்ட விருந்தின் போது மாப்பிள்ளை மௌனமாக இருந்தான்; குழப்பமடைந்தவனாகக் காணப்பட்டான்.

இரண்டு நாட்கள் அப்படியே ஒரு வார்த்தை கூட யாரிடமும் பேசாமல் இருந்தான் அந்த இளைஞன். 'ஏன் இவன் ஒன்றுமே பேசவில்லை' என்று அங்கிருந்தவர்கள்



"நான் கணக்கில் புலின்னு நேத்து எங்க அண்ணனிடம் நிரூபிச்சிட்டேன்.''

"எப்படி? எல்லா கணக்கையும் சரியா போட்டுட்டியா?''

"இல்லை உறுமிகிட்டே கணக்குப் போட்டேன்!''

— தாரை மா. மகேஷ்



எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

மூன்றாம் நாள் அந்தப் பண்ணைக் காரருக்கு மிகவும் கோபம் வந்து விட்டது.

இச்சமயத்தில் செல்வமும், சந்தோஷமும் சூழ்நிலை மிக மோசமடைந்து வருவதை கண்ணுற்றன.

எனவே; அவை இரண்டும் அந்த இளைஞனுக்கு மீண்டும் விவேகத்தை அளிக்கும்படி அறிவினிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டன. இதன்படி அறிவு அந்த இளைஞனுக்கு விவேகத்தை அளித்தது. அப்போது அந்தப் பண்ணையார் இளைஞனிடம் வந்தார்.

"ஏன் ஒன்றுமே பேசாமல் மௌனமாக இருக்கிறாய்?" என்று கேட்டார். எல்லோரும் வியப்படைய அந்த இளைஞன் பேச ஆரம்பித்தான்.

"நான் குழந்தையாக இருந்தபோது பகைவர்கள் எங்கள் கிராமத்தின் மீது படையெடுத்தனர். கிராமத்தில் இருந்த ஆண்கள், பெண்கள் அனைவரும் அதை பாதுகாக்கக் கிளர்ந்தெழுந்தார்கள். அவர்கள் அனைவரிலும் ஓர் இளம் போர் வீரன் துணிவு மிக்கவனாக இருந்தான். அவன் தன்னந்தனியாகவே போராடி பகைவர்களில் அநேகமாக அனைவரையும் முறியடித்து விட்டான். போர் முடிந்த பின்னர் அப்படி அற்புதமாகப் போராடியது, போர் வீரனின் உடையணிந்த ஒரு பெண் என்பது தெரிய வந்தது. எனவே, இந்தப் பெண்ணும் அவ்வளவு வீரமுடையவளாக இருக்கக் கூடுமா என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். அதனால்தான் கடந்த இரு தினங்களாக ஏதும் பேசாமல் இருந்தேன்" என்றான்.

தனது எதிர் கால மாப்பிள்ளை இவ்வளவு புத்திசாலித்தனத்துடன் பேசுவதைக் கேட்டு அந்தப் பண்ணையார் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பின்னர் அந்த இளைஞன் மணமகளைத் தன் கிராமத்துக்கு அழைத்துச் சென்றான்.


சந்தோஷமும், செல்வமும், அறிவும் மீண்டும் சந்தித்துக் கொண்டன. மனிதனுக்கு மிகவும் முக்கியமானது அறிவுதான் என்ற முடிவுக்கு வந்தன.



தாத்தா காதில் விழ வேண்டாமா?

கின்னஸில் பெயர்!

அரிய செயல்கள் செய்பவர்களின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார் அப்பா. "நீங்கள் இருவரும் கின்னஸில் இடம் பெறும் வகையில் ஏதாவது செய்யுங்களேன்" என்று என்னிடமும் தங்கையிடமும் கூறினார் அப்பா. "என் பெயர் ஏற்கனவே இருக்கு'' என்று கூறிய தங்கை சமையலறையை நோக்கி ஓடினாள். நானும் அப்பாவும் புரியாது விழித்தோம். அடுத்த நிமிடம் கையில் ஒரு கிண்ணத்துடன் வந்து



"பாருங்கப்பா என் பெயர் இந்தக் கிண்ணத்திலே இருக்கு" என்றவுடன் நானும் அப்பாவும் வாய் விட்டுச் சிரித்தோம். பிறகு கிண்ணம் அல்ல. கின்னஸ் என்று விளக்கினோம்.

– க. காத்யாயனி, ஏழாம் வகுப்பு, 'அ' பிரிவு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி

காது கேட்கும்!

என் தம்பிக்கு கிரிக்கெட் விளையாடுவது என்றால் ரொம்பப் பிடிக்கும். ஒருநாள் சாமி படத்திற்கு முன் நின்று "கடவுளே எனக்கு ஒரு கிரிக்கெட் பேட் அனுப்பேன்" என்று சத்தம் போட்டு கும்பிட்டான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மா "சாமிக்கு மெதுவா சொன்னாலே கேட்கும், எதுக்கு சத்தம்?" என்றார். "சாமிக்கு கேட்கும், வாசலில் இருக்கும் தாத்தா காதில் விழ வேண்டாமா?" என்றானே பார்க்கலாம்! தாத்தாவே சிரித்து விட்டார்.

– வி.ஆர். கிருத்திகா, பெல் டவுன்ஷிப், திருச்சி.




நகரப் பேருந்து

வள்ளியூர் செல்வதற்குப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தோம். வழியில் ஒரு டவுன் பஸ் 'பிரேக் டவுன்' ஆகி நின்று கொண்டிருந்தது. இதைப் பார்த்த அருகில் இருந்த சிறுவன் ''ஏன் பஸ் நிக்கிது?'' என்று கேட்டான். "அது பழுதாகி விட்டது. அதனால்தான் நிற்கிறது'' என்று பதிலளித்தார் சிறுவனின் அப்பா. உடனே அச்சிறு

அள்ளிக் கொள்!

நண்பனும் நானும் கடைக்குச் சென்றோம். அந்தக் கடைக்காரர் என் அப்பாவின் நண்பர். சாமான்களை வாங்கி முடித்ததும் ''நீங்க ரெண்டு பேரும் பட்டாணியை அள்ளிக்குங்க'' என்றார். நான் கொஞ்சம் பட்டாணியை எடுத்துக் கொண்டேன். என் நண்பன் எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். அந்தக் கடைக்காரரே அவன் பையில் பட்டாணியைப் போட்டார். நாங்கள் வீடு திரும்பும் வழியில் "ஏண்டா பட்டாணியை எடுக்காமல் நின்றே?'' என்று கேட்டேன் நண்பனிடம். அதற்கு "நானே எடுத்தால் பை நிறைந்திருக்காது. அவர் கொடுத்ததால்தான் நிறைய பட்டாணி கிடைத்தது'' என்றானே பார்க்கலாம்!



நா.பா. குகன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேனிலைப்பள்ளி,
பெரியதச்சூர்
அஞ்சல்

ஆண் பூனை!

என்னையும் தம்பியையும் அழைத்துக் கொண்டு பார்க்கிற்குச் சென்றார் அப்பா. அங்கு ஒரு பூனையின் சிலை வைக்கப்பட்டிருந்தது. என் தம்பி அந்தச் சிலையைப் பார்த்தவுடன் ''இது ஆண்





பூனை'' என்றான். நான் ஆச்சர்யமாக ''எப்படி கண்டுபிடிச்சே?'' என்றேன். "அதுக்குத்தான் மீசை இருக்கே'' என்றான். பார்க்கில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாம் சிரிக்க ஆரம்பித்தனர்.

– முகமது பாஷா,
பதினோராம் வகுப்பு,
அரசினர் ஆண்கள்
மேல் நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

வன் ''அப்ப இது 'நகரப் பேருந்து' இல்லை. 'நகராப் பேருந்து' என்று கூறியவுடன் அனைவரும் ரசித்துப் பாராட்டினோம்.

– தி.க. பாலசுப்ரமணியன்,
திருவண்ணாதபுரம்.





விசுவாச நாய்!

பசுமலையில் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வீட்டில் நன்றியுள்ள நாயையும், பால் தரும் பசுவையும் வளர்த்து வந்தார். அவருக்கு ஒரே மகள். மகளின் திருமணம் வெகு விமரிசையாக நடக்க வேண்டும் என்று எண்ணினார்.

திருமண நாளும் குறித்தாயிற்று. அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டன. ஊரில் உள்ள அனைத்து மக்களுக்கும் பத்திரிகை கொடுத்தார். திருமணம் சிறப்பாக முடிந்தது.

எல்லோரையும் அழைத்து விருந்து உபசரிக்க வேண்டும். ஆதலால் புலவர் சமையற்கட்டுக்கு அடிக்கடி சென்று வந்தார். சமையற்கட்டு பந்தலின் மேல் புறத்தில் கருடன் காலில் நல்ல பாம்பு ஒன்று சிக்கியிருந்தது. அதனை கவனிக்கவில்லை புலவர்.

அதனைப் பார்த்த நாய், பாம்பு விஷம் கக்கியிருக்குமோ என அஞ்சி, ஆயிரக்கணக்கானோர் மாண்டு போவதை விட தான் ஒருவன் சாவதே மேல் என்று எண்ணியது. பாயஸத்தை நாக்கால் நக்கியது. அதனைப் பார்த்த புலவர் நாயை அடித்துத் துரத்தி விட்டார். 'என்னதான் நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அது பழைய நிலைக்குத் தான் செல்லும் என்ற பழமொழிக்கு எடுத்துக் காட்டாய் நம்ம நாயும் திகழ்கிறதே, சே!' என வருந்தினார். அதற்குப் பிறகு வேறு பாயஸம் செய்து கல்யாணச் சாப்பாட்டில் போட்டார்.


அன்று இரவு அந்த நாய் வீட்டிற்கு வந்தது. மாட்டுக் கொட்டகையில் படுத்துக் கொண்டது. கொல்லைப் புறத்தில் புலவர் வந்தார். அப்போது நாயும் பசுவும் பேசிக் கொண்டன. பசு கேட்டது ''நம் முதலாளி மிகவும் நல்லவர். நம்மை எப்படி கவனித்து வளர்க்கிறார். அவர் மகள் கல்யாண சாப்பாட்டில் வாய் வைத்து இப்படி பாயசத்தை வீணடித்து விட்டாயே!'' என்றது. அதற்கு நாய் ''சமையற்கட்டின் மேல் கருடன் காலில் பாம்பு ஒன்று இருந்தது. பாம்பு விஷத்தை கக்கியிருக்கலாம். அதற்காகத்தான் இப்படி செய்தேன்'' என்றது.

புலவர் மனம் நெகிழ்ந்து போனார். நாம் தவறு செய்து விட்டோமோ என வருந்தினார்.

நாயை கூப்பிட்டு பாலும் பழமும் அளித்தார். திருப்தியாய் நாய் சாப்பிட்டது.

– உ. மகேஸ்வ ரமணி,
சோழபுரம்.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. பறக்க இயலாத பறவைகளில் ஒன்று. ஆனால் தண்ணீரில் நன்றாக நீந்தும் (5)

7. பூக்களுக்கு இது உண்டு (3)

8. பிரகதீஸ்வரர் ஆலயம் இங்கு உள்ளது (3)

14. ஞாபகத்திற்கு எதிர்பதம் (3)

15. அமெரிக்காவைக் கண்டறிந்தவர் (5)

வலமிருந்து இடம்:

2. பதில் சொல்ல வேண்டுமானால் இது கேட்க வேண்டும் (3)

6. மனிதனின் உடம்பில் உள்ள மிகப் பெரிய உறுப்பு (2)

9. கரும்பிலிருந்து சாறு எடுத்தவுடன் கிடைக்கும். இதிலிருந்து காகிதம் தயாரிக்கிறார்கள் (3)

11. தவறு என்பதை இப்படியும் குறிப்பிடலாம் (2)

மேலிருந்து கீழ்

1. எரிபொருள்களில் ஒன்று (4)

2. ஓணம் பண்டிகை இம்மாநிலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது (4)

11. இந்த ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் வென்ற நாடு (4)

12. பாம்புகளில் ஒரு இனம் (3)

13. அறிவு என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

கீழிருந்து மேல்

3. நாம் வாழும் இதை பாதுகாக்க வேண்டும் (2)

4. மரங்களில் ஒருவகை. உறுதியானது, விலை மதிப்பு மிக்கது (3)

5. யானையை பழக்கி அழைத்து வருபவர் (3)

8. விமானங்கள் இதில் இறங்கும் (2)

10. காகிதங்களை ஒட்டுவதற்குப் பயன்படும் (2)

14. பூக்களில் ஒன்று வாசனை அதிகம் (4)

15. வெள்ளை நிறப் பறவை, ஆறு, ஏரி, குளங்களில் மீன் பிடிக்கக் காத்திருக்கும் (3)

எஸ். குமார்,
ஏழாம் வகுப்பு,
ஜி.கே.எம். காலனி,
சென்னை

விடை - 63 ஆம் பக்கம்

மான்கள்



சுபத்ராவின் கணவன் ரொம்ப அப்பாவி. சுபத்ரா ஒரு பணக்கார வீட்டில் சமையல் வேலை செய்து வந்தாள். அவர்கள் வீட்டு பின்புறத்திலேயே தங்க அனுமதித்திருந்தனர். சுபத்ராவின் கணவன் பாட்டுக் கட்டுகிறேன் என்று நேரத்தை வீணடித்தது அவளுக்கு மிகுந்த கோபத்தைத் தந்தது.

ஒருநாள் காலை கணவனிடம் வேலை தேடுமாறு எரிந்து விழுந்தாள். அவனோ, ''நீ பார்த்துக் கொண்டே இரு. நான் பெரும் புலவனாகி பேரும், புகழும் பெறப் போகிறேன்'' என்று சவால் விட்டான்.

''பாட்டுக்கு நாலடி வேண்டும். அதாவது தெரியுமோ?'' என்று கேலியாகச் சொல்லி விட்டு வேலைக்குச் சென்று விட்டாள் சுபத்ரா.

அவள் கணவன் ரோஷத்துடன் வெளியே கால் போன போக்கில் நடந்தான்.

இரண்டு தென்னை மரங்கள் ஒட்டி வளர்ந்திருப்பதைக் கண்டு அதிசயப்பட்டான். உடனே ஓலைச் சுவடியில் 'இரு தென்னை மரம் நிற்கக் கண்டேன்' என்று எழுதிக் கொண்டான்.

இன்னும் சற்று தூரம் சென்றதும் இரண்டு குருவிகள் கூடு கட்டுவதற்காக மரத்தில் இடம் அமைத்துக் கொண்டிருந்தன. அதைப் பார்த்ததும் 'இரு குருவி குடையக் கண்டேன்' என்று குறித்துக் கொண்டான்.

மேலே கொஞ்ச தூரம் நடந்ததும் இரண்டு ஆந்தைகளைப் பார்த்தான். ஆந்தைகளுக்கு விழி பெரிது. சும்மா பார்த்தாலே முழித்துப் பார்ப்பதுபோல் இருக்கும். 'ஈராந்தை விழிக்கக் கண்டேன்' என்று மூன்றாவது வரியைச் சேர்த்தான்.

ஜமீந்தார் வீட்டு வழியே திரும்பினான். இரண்டு மான்கள் ஒன்றை ஒன்று துரத்தி விளையாடிக் கொண்டிருந்தன. 'இரு மான் ஓடக் கண்டேன்' என்று நான்காவது வரியைச் சேர்த்துக் கொண்டு வீடு திரும்பினான்.

ஓடக் கண்டேன்!

மதியம் வேலை முடிந்து ஓய்வெடுக்க வந்த மனைவியிடம் "ஒரு அருமையான பாட்டு இயற்றி இருக்கிறேன். கேட்கிறாயா?'' என்றான்.

சுபத்ரா "ஒரே அலுப்பாயிருக்கிறது. கொஞ்சம் தூங்க வேண்டும். அப்புறம் படிக்கலாம்'' என்று சொல்லி விட்டாள். சுபத்ராவின் கணவனும் தூங்கினான். எழுந்து பார்த்தால் பங்களாவுக்குப் போய் விட்டிருந்தாள் சுபத்ரா.

இரவு சுபத்ரா வீடு வந்தபோது அவன் தூங்கி விட்டான். நள்ளிரவில் விழிப்பு வந்தது. பார்த்தால் சுபத்ராவும் விழித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன சுபத்ரா! தூக்கம் வரலியா?'' என்று விசாரித்தான்.

"வயிற்றை வலிக்கிறது. இப்போதான் கஷாயம் வைத்துக் குடித்தேன். என்னமோ கவிதை எழுதி இருக்கிறதாகச் சொன்னீர்களே! அதைப் படியுங்கள். கொஞ்சம் வலியை மறக்கலாம்'' என்றாள் சுபத்ரா.

உடனே ஓலையை எடுத்து வந்தான் அவள் கணவன். அந்த நள்ளிரவில் பங்களாவில் இரண்டு திருடர்கள் திருட திட்டம் போட்டு மரத்திற்குப் பின் நின்றிருந்தனர்.

"இரு தென்னை மரம் நிற்கக் கண்டேன்'' என்ற முதல் வரியைக் கம்பீரமாகப் படித்தான். நிசப்தமான அந்த இரவு வேளையில் அது கணீரென்று ஒலித்தது.

இரண்டு திருடர்களும் "நம்மை எவராவது பார்த்திருப்பார்களோ? அதுதான் ஜாடையாகத் தென்னை மரம் என்று குறிப்பிடுகிறார்களோ!' என்று சந்தேகப்பட்டனர். ஆனாலும் அகப்பட்டதைச் சுருட்டுவோமென்று வீட்டை ஆராய்ந்தனர்.

"எப்படி இருக்கு?'' என்று கேட்டான் கணவன். "ஒரு வரிதானே படிச்சிருக்கிங்க! அடுத்த வரியைப் படியுங்க'' என்றாள் சுபத்ரா.

"இரு குருவி குடையக் கண்டேன்.''

'சந்தேகமேயில்லை... நம்மைத்தான் பூடகமாகக் குறிப்பிடுகிறார்கள்... ஜோசியக்காரர் யாராவது குடி இருக்கிறார்களோ' என்று விழித்தனர்.

"ஈ ராந்தை விழிக்கக் கண்டேன்''- மூன்றாவது வரியைக் கேட்டதும், தப்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தலை தெறிக்க ஓடினர்.

"இரு மான் ஓடக் கண்டேன்'' - நான்காவது வரி காதில் விழுந்ததும் ஓட்டத்தில் தடுமாறி சாமான்களை உருட்டி கீழே தள்ள வீட்டுக்காரர்கள் எழுந்து திருடர்களைப் பிடித்து மொத்தினர். பங்களாவில் விளக்கு வெளிச்சம் தெரியவும், சுபத்ராவும் அவள் கணவனும் அங்கு விரைந்தனர்.

ஒரு திருடன் "இது ஜோசியக்கார வீடுன்னு தெரியாமப் போச்சு! அதோ ஓலையோட நிக்கறாரே! அவர் எங்களைத் தென்னை மரம், குருவி, ஆந்தை, மான் என்றெல்லாம் சந்கேதமாகச் சொன்னார்'' என்றான்.

இரண்டாமவன் "தப்பித்து ஓடி விடலாம்'' என்று நினைத்தோம். அதற்குள் அகப்பட்டுக்கிட்டோம். அவ்வளவுதான்'' என்றான்.

திருடர்களைப் பிடித்துக் கொடுத்ததற்காக சுபத்ராவின் கணவனுக்கு ஏராளமான பரிசுகள் கிடைத்தன. சுபத்ராவுக்கு மட்டும்தானே தன் கணவனின் சாமர்த்தியம் தெரியும்!


மாலதி

உடைந்த எலும்பு வளருமா?

● எஸ். சரவணன், மோகனூர்.

? நான் சமீபத்தில் ஊட்டி போயிருந்தேன். மலையிலிருந்து இறங்கும்போது இரண்டு காதுகளும் பயங்கரமாக வலித்தன. பின்னர் மருந்து எதுவும் போடாமலேயே வலி சரியாகி விட்டது. இது எதனால், டாக்டர்?

! கடல் மட்டத்திலிருந்து உயரே செல்லச் செல்ல ஆகாயக் காற்றின் அழுத்தம் குறையும். அதே சமயம் நம் காதினுள் உள்ள அழுத்தம் அதிகமாக இருக்கும். மாறாக உயரமான இடத்திலிருந்து கீழே இறங்க இறங்க ஆகாயக் காற்றின் அழுத்தம் அதிகமாகும். காதின் காற்றழுத்தம் குறையும். இந்த இரு அழுத்தங்களின் வேறுபாடு காரணமாக காதில் உள்ள செவிப்பறை மிகுதியாக அழுத்தப்பட்டு காதடைப்பு, காது வலி போன்ற தொல்லைகள் ஏற்படும். பின்னர் தரைக்கு நாம் வந்ததும் இரு அழுத்தங்களும் சமமாகி விடுவதால் செவிப்பறை பாதிப்பு நீங்கி, காதுவலி சரியாகி விடும். இம் மாதிரி சமயங்களில் காது வலி வராமலிருக்க ஓர் எளிய ஆலோசனை - அடிக்கடி கொட்டாவி விடுகிறமாதிரி வாயைத் திறந்து மூடுங்கள் அல்லது சாக்லேட்டை வாயில் போட்டு மெல்லுங்கள். ஆகாயக் காற்றின் அழுத்தமும் காதின் காற்றழுத்தமும் சமமாகி விடும்; காது வலிக்கு இடமில்லாமல் போகும்.







● கா. ஹைதர் உசேன்,
மேலூர்.

? பழைய சாதம், சுடு சாதம் இவற்றில் எது அதிக சத்து தருகிறது?

! இரண்டும் ஒரே சத்து தருபவைதான் என்றாலும் பழைய சாதத்தால் கிடைக்கக் கூடிய நன்மை ஒன்று உண்டு. அது எளிதான செரிமாணம்! எச்சரிக்கை - பழைய சாதம் கெட்டுப் போய் விட்டால் அது நச்சுணவாக மாறி விடும் ஆபத்தும் உள்ளது. கவனம் தேவை.

● கே. ஸ்ரீதேவி,
சென்னை - 23.

? தண்ணீர் குடத்தை இடுப்பில் தூக்கினால், பளு தாங்காமல் இடுப்பு எலும்பு தேய்ந்து போகுமா, டாக்டர்?

! ஒருவரின் வயதிற்கேற்பவும், உடல் எடைக்கு ஏற்பவும் சரியான அளவில் தண்ணீர் குடத்தை இடுப்பில் தூக்கினால் இடுப்பு எலும்பு தேய்வதற்கு வாய்ப்பில்லை. அளவுக்கு மீறி பளுவைத் தூக்கினால் இடுப்பு எலும்பு பாதிக்கப்படும். 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப் பண்டம், சால மிகுத்துப் பெயின்' என்ற குறளைப் படித்ததில்லையா, ஸ்ரீதேவி? அளவுக்கு மீறிய மயிலிறகு ஏற்றிய வண்டியின் அச்சே முறியும்போது, நம் இடுப் பெலும்பு எம்மாத்திரம்?

● கெ. அசோக்குமார்,
பரமணந்தல்.

? பெண்கள் கர்ப்ப காலத்தில் 'ஸ்கேன்' எடுப்பதால் குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்கிறார்களே, இது உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை, அசோக்குமார். பெண்களின் கர்ப்ப காலத்தில் 'அல்ட்ரா சோனோ

கிராம்' (Ultrasonogram) என்கிற ஸ்கேன் பரிசோதனையை எத்தனை முறை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். இதனால் குழந்தைக்கு எவ்விதத்திலும் பாதிப்பு வராது. இது நிச்சயம்!

● காழி. ஆர். சீதாராமன்,
தென்பாதி.

? மஞ்சள் காமாலை நோய் வரும் நோயாளிகளுக்குக் கண்களும் உடலும் மஞ்சள் நிறமாகக் காணப்படுவது ஏன்? இதைத் தடுக்க முறையான வழிகளைக் கூறுங்கள், டாக்டர்!


! மஞ்சள் காமாலை நோயின் போது 'பைலிருபின்' (Bilirubin) என்ற ஒரு நிறமிப் பொருள் நம் ரத்தத்தில் அதிகரித்து விடும். இது பார்ப்பதற்கு மஞ்சள் நிறத்தில் இருக்கும். உடம்பில் கண்கள், நாக்கு, நகம், தோல் மற்றும் மெல்லிய சவ்வுப் பகுதிகளில் இது தங்கும். அப்போது அந்த இடங்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். மஞ்சள் காமாலை நோயைத் தடுக்க சிறந்த வழி குடிநீரைக் காய்ச்சி ஆற வைத்துக் குடிப்பதுதான். அடுத்த வழி சுயசுத்தம், சுகாதாரம் பேணுவது. முக்கியமான வழி, மஞ்சள் காமாலைத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்வது.


● எஸ். ஸ்டீவன்,
சென்னை – 82.

*? குண்டாக இருப்பவர்கள் உடம்பைக் குறைக்க 'லைப்போ-சக்சன்' (**Lipo - suction**) என்ற சிகிச்சையை செய்கிறார்களாமே... சென்னையில் இதை எங்கு செய்கிறார்கள்? எவ்வளவு செலவாகும்?*

! சென்னையில் பிரபலமாக உள்ள எல்லா நவீன மருத்துவ மனைகளிலும் இது செய்யப்படுகிறது. இதற்கு சுமார் பத்தாயிரம் ரூபாய் செலவாகும்.







கேட்கட்டுமா டாக்டர்?

● கு.வ.சு.கு.வே. சித்திரவேலு,
கருப்பம்புலம்.

? திருவிழாக்களில் சிறுவர்களுக்குக் கண்ட கண்ட வண்ணங்களில் கூலிங்கிளாஸ் விற்கப்படுகிறதே, இது எந்த அளவுக்கு நன்மை?

! இந்தக் கண்ணாடிகளால் கண்களுக்கு எவ்விதத்திலும் நன்மை கிடைப்பதில்லை. கெடுதல்தான் அதிகம். பொதுவாக மருத்துவர் சொல்லாமல் கண்களுக்குக் கண்ணாடி அணிவது நல்லதில்லை, சித்திரவேலு!

● எம்.கே. சக்திவேல், சேலம்.

? எலும்பு உடைந்தால் வளர்ந்து விடுகிறது? இது எந்த வயது வரை வளரும்? எந்த வயதில் எலும்பு உடைந்தால் வளராது, டாக்டர்?

! 'எலும்பு உடைந்தால் வளர்ந்து விடும்' என்ற தவறான எண்ணம் நிறைய பேரிடம் உள்ளது. இது உண்மையில்லை. உடைந்த எலும்பு வளர்வதில்லை. உடைந்த இரண்டு எலும்புகளுக்கிடையே கால்சியம் கலந்த, கடினமான திசுப் (callus) பொருள் உருவாகிறது. எப்படி இரண்டு செங்கல்களுக்கிடையில் சிமெண்ட்டால் ஆன 'சாந்து' போட்டால் அது செங்கற்களை இறுக்கமாகப் பற்றிக் கொள்கிறதோ, அம்மாதிரிதான் இந்த எலும்புச் சாந்தும் உடைந்த இரண்டு எலும்புகளையும் நன்றாகப் பற்றிக் கொள்கிறது. இந்த உடலியல் நிகழ்ச்சி பிறந்த குழந்தையிலிருந்து பல் போன கிழவர்கள்வரை எல்லோருக்குமே நடக்கும்.

டாக்டர் கு. கணேசன்

குறும்பு

நிதானமாகவே பெடல் போட்டான் நிர்மல் குமார்.

'ட்ரிங்.. ட்ரிங்.. ட்ரிங்!' பின்னால் வரும் சைக்கிளின் படபடப்பான மணியின் ஓசை கேட்டுத் தலையைத் திருப்பினான் நிர்மல். அவன் வகுப்பு நண்பன் அசோக்கின் சைக்கிள் அசுர வேகத்தில் பறந்து வந்தது. முன்னால் போய்க் கொண்டிருக்கும் நிர்மலின் வண்டியை ஓவர் டேக் பண்ணும் அவன் நோக்கம் பார்வையிலும் செயலிலும் பளிச் சிட்டது.

"ஹலோ அசோக்! இப்பத் தான் வர்றியா? நீ போயிருப்பேன்னு நினைத் தேன்'' என்று விசாரித்தான் நிர்மல்.

அவனது வார்த்தைகளை அசோக் காதில் வாங்கியதாகவே காட்டிக் கொள்ளவில்லை. வேறு பக்கம் பார்வையைத் திருப்பியவனாய் 'விர்'ரென்று முந்திக் கொண்டு வேகமாய்ப் பறந்தான்.

நிர்மலுக்கு வருத்தமாக இருந்தது.

'அசோக்கிற்குத் திடீரென்று என்னாச்சு? ஏன் இப்படிப் பாராமுகமாக விலகிப் போறான்?' நிர்மல் ஒரு கணம் திகைத்தான். பட்டென்று அவனுக்கு நினைவு வந்தது. முதல் நாள் நிகழ்ந்த அந்தச் சிறு சம்பவம்தான் அசோக்கின் இந்த மாற்றத்துக்குக் காரணம் என்பதை அவனால் யூகிக்க முடிந்தது.

அசோக்கும் நிர்மலும் வாலகுருவபுரம் என்னும் சிற்றூரில் அடுத்தடுத்த தெருவில் வசிப்பவர்கள். தினசரி மூன்று கிலோ மீட்டர் தூரம் சைக்கிளில் போய், அருகில் இருக்கும் சிறு நகர் ஒன்றின் உயர்நிலைப் பள்ளியில் ஒரே வகுப்பில் படித்தார்கள்.

முதல் நாள் மாலை இருவரும் தங்கள் ஊரை நெருங்கினார்கள். நீண்ட நாட்களாக சாய்ந்து உடைந்து கிடந்த அவர்கள் ஊரின் பெயர்ப் பலகை அன்றுதான் நிமிர்த்தி ஊன்றப்பட்டிருந்தது. மங்கி அழிந்து போயிருந்த அப்பலகையில் புதிதாக மஞ்சள் வண்ணம் தீட்டி, கண்ணைக் கவரும் கறுப்பு வண்ணத்தில் 'வாலகுருவபுரம்' என்ற பெயர் பளிச்சென்று எழுதப்பட்டிருந்தது.

அந்தப் பலகையைப் பார்த்ததுமே அசோக்கிற்கு என்ன தோன்றியதோ? அக்கம் பக்கம் யாருமில்லை. உடனே சைக்கிளை விட்டிறங்கினான்.

"நிர்மல், நம்ம ஊர்ப் பெயரிலே ஒரு வினோதம் பண்ணப் போறேன்; பார்க்கிறியா?'' என்று புதிர் போட்டபடி ஒரு குச்சியைத் தேடி எடுத்தான். ஒன்றும் புரியாமல் நின்ற நிர்மல், சாலை ஓரத்தில் காய்ச்சி வைக்கப்பட்டிருந்த தார் டின்னுக்குள் குச்சியை அசோக் முக்கி எடுத்தபோது திடுக்கிட்டுப் போனான்.

அந்தப் பெயர்ப் பலகையில் அசோக் ஏதோ தவறு செய்யப் போகிறான் என்பதை அனுமானித்துக் கொண்டு "வேண்டாண்டா அசோக்; படிச்சவன் செய்யிற வேலையில்லே இது. பொதுச் சொத்துக்குச் சேதம் பண்ணுறது பொறுப்புள்ளவங்களுக்கு அழகில்லே!'' என்று நண்பனிடம் கூறினான் நிர்மல்.

"கொஞ்ச நேரம் பொறுத்துப் பாரு. நம்ம ஊர்ப் பேரை எவ்வளவு வேடிக்கையான பேரா மாத்தப் போறேன்னு...'' தடுக்க முயன்ற நிர்மலின் புலம்பலை அசோக் சட்டை பண்ணவே இல்லை. ஓடிப் போய் அவன் கையிலிருந்த தார்க்குச்சியைப் பறிக்க முயன்றான் நிர்மல். அவனால் முடியவில்லை.

ஊர்ப் பெயரில் இருந்த 'ல' என்ற எழுத்தின் மீது ஒரு வட்டப்புள்ளியை வைத்தான். 'வ' என்பதன் உச்சி தொடங்கி ஒரு கீழ்க் கோட்டை இழுத்தான். அடுத்த நிமிடம் 'வாலகுருவபுரம்' என்ற அந்த அழகான ஊர்ப் பெயர் 'வால்குருவிபுரம்' என்று விசித்திரமாகக் காட்சியளித்தது.

நிர்மல் கோபப்பட்டான்.

"போதும் நிறுத்துடா. இதென்ன உங்க வீட்டுப் பலகையாடா? இனிமே என்னோட பேசாதே; சேராதே!'' என்று சுட்டெரிக்கும் சொற்களை வாரிக் கொட்டி விட்டு, சைக்கிளில் ஏறித் திரும்பிப் பார்க்காமல் விரைந்து விட்டான்.

இந்தச் சம்பவம் காரணமாகத்தான் அசோக் தன்னை இப்போது லட்சியம் செய்யாமல் முந்துகிறான் என்பது நிர்மலுக்குப் புரிந்தது. விரைந்து போய் அவனைச் சமாதானப் படுத்த நிர்மலுக்கு நினைப்பும் இல்லை; நேரமும் இல்லை.

'தவறு செய்யும் நண்பனைத் தட்டிக்

குரு சீனிவாசன்

கேட்பது தப்பா?' என்று தனக்குத் தானே நினைத்துக் கொண்ட நிர்மலுக்கு, அசோக்கை நினைக்கும் போது வருத்தமாக இருந்தது.

நாட்கள் சென்றன.

அசோக் வருத்தமாக ஆற்றங்கரையில் உட்கார்ந்திருந்தான்.

அங்கு வந்த நிர்மல் "என்ன அசோக் ரொம்ப கவலையா இருக்கே?" என்று கேட்டான்.

"உனக்கே தெரியும் அடுத்த வாரம் எங்க அக்காவுக்கு கல்யாணம். சிங்கப்பூரிலிருந்து மாமா தன் நண்பரிடம் பணமும் நகையும் கொடுத்து அனுப்புவதாகச் சொல்லி இருந்தார். இன்னும் வந்து சேரலை. கல்யாணம் நடக்குமான்னு எங்கப்பாவே பயப்படறார். அதான் எனக்கு அழுகையா வருது" என்று கண்கலங்கினான் அசோக்.

"பத்து மணி பஸ்ஸுக்கு எங்க அப்பா டவுனுக்குப் போறார். உங்க மாமா போன் நம்பரைக் கொடு. கேட்டுப் பார்க்கலாம்" என்றான் ஆதரவோடு நிர்மல்.

அசோக் நம்பிக்கை வந்தவனாக நம்பரை நிர்மலிடம் கொடுத்தான்.

மாலையில் டவுனிலிருந்து வந்த நிர்மலின் அப்பா நேராக அசோக் வீட்டிற்குச் சென்றார்.

அசோக்கின் அப்பா, நிர்மல், அசோக் அனைவரும் உட்கார்ந்திருந்தனர்.

"மாமா என்ன ஆச்சு?" என்று வேகமாகக் கேட்டான் அசோக்.


"உங்க மாமா ரெண்டு வாரத்துக்கு முன்னாடியே பணத்தைக் கொடுத்து நண்பரை அனுப்பி வைத்தாராம். புதுசா வந்த அந்த ஆளுக்கு நம்ம ஊரைக் கண்டுபிடிக்க முடியலை. எவனோ ஒருத்தன் நம்ம ஊர் பெயர் பலகையில் 'வாலகுருவபுரம்' என்பதை 'வால் குருவிபுரம்' என்று மாற்றி எழுதியிருக்கான். அதனால் வந்ததுதான் இவ்வளவு கஷ்டமும்" என்று நிறுத்தினார் நிர்மலின் அப்பா.

"எவன் இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்தானோ! ஒரு வாரமா எவ்வளவு கஷ்டப்பட்டுட்டோம். இப்ப பணத்தை எப்படி வாங்குவது?" என்று கேட்டார் அசோக்கின் அப்பா.

"நானே அந்த நண்பரோட போன் நம்பரைக் கேட்டு வாங்கி, விளக்கமாகப் பேசிட்டேன். நாளைக்கு பணத்தோட வருவார்" என்றார் நிர்மலின் அப்பா.

"ரொம்ப நன்றிங்க!" என்று அன்புடன் கைகுலுக்கினார் அசோக்கின் அப்பா.

மறுநாள் பெயர் பலகையில் ஊரின் பெயர் வாலகுருவபுரம் என்றிருந்தது.



பிருந்தாவனம்



அண்டார்டிகாவில் பெருமளவில் வாழ்கின்ற பெங்குவின் பறவைகள், கடல் நீருக்குள் நீந்தியபடி 15 நிமிடங்களுக்கு மேலும் இருக்கக் கூடியவை. கடலுக்கடியில் 300 மீட்டர் ஆழம் வரை அவை செல்லும். அண்டார்டிக்காவில் இவை மட்டுமின்றி உலகில் வேறெங்குப் காணப்படாத பத்து வகைப் பறவைகள் உள்ளனவாம்.

'அதிசயச் செய்திகள்' நூலிலிருந்து.

கே. ராஜேஸ்வரி,
7ம் வகுப்பு 'ஆ'
அரசு மேனிலைப்பள்ளி, கோவிலூர்.

உலகிலேயே மிகப் பெரிய மலர்!

இந்தோனேஷியாவைச் சேர்ந்த சுமத்ரா தீவுகளில் மலரும் 'ராபின்ஸியா கர்னால்ட்' என்னும் மலரே உல கின் மிகப் பெரிய மலராகும். இதன் எடை ஏழு கிலோ. குறுக்களவு சுமார் ஒரு மீட்டர். தேன் பையைத் தாங்கும் மத்திய பகுதி மட்டும் 30 செமீ குறுக்களவு. ஒவ்வொரு இதழும் 30 செ.மீ நீளம். நடுவில் உள்ள கிண்ணம் போன்ற பகுதியில் 10 லிட்டர் தண்ணீர் ஊற்றலாம்! இது இளஞ்சிவப்பு நிறமானது.

'உலகப் புகழ் பெற்ற அதிசயங்கள்' என்ற நூலிலிருந்து:

எல். கோபாலகிருஷ்ணன்.
வேலூர் - 6.





ஒட்டகச் சிவிங்கி பிறக்கும்போதே ஆறடி உயரம் இருக்கும். நன்றாக வளர்ந்த பிறகு உயரம் பதினெட்டு அடியாக இருக்கும். இது மணிக்கு 35 கி.மீ வேகத்தில் ஓடும். ஒட்டகச் சிவிங்கிக்குப் பின்னங் காலின் பலம் மிகவும் அதிகம். பின்னங் கால்களால் எட்டி உதைத்தால் சிங்கம் அந்த இடத்திலேயே இறந்து விடும்.

ஆதாரம்: பொது அறிவுக் குவியல்

பி.தியாகராஜன், பேளுக்குறிச்சி.

எட்டு வயது சிறுவனின் சாதனை

அகில உலக ரீதியில் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்ட சிறுவன் ஜாய் பாஸ்டர் என்பவன்தான். இவன் தனது எட்டாவது வயதில் டேபிள் டென்னிஸ் விளையாட்டில் தனித்து இரட்டையர் ஆட்டத்தில் வெற்றி பெற்று சாம்பியன் ஷிப் பட்டத்தை

ஊர்ப் பறவைகள்!

குருவிகுளம், நாரைக்கிணறு, கழுகு மலை, கோழியூர், காக்கைபட்டி இவை யெல்லாம் நெல்லை மாவட்டத்தில் பறவைகளின் பெயரால் உள்ள ஊர்ப் பெயர்கள்.

ஆர்.ஏ.சரளா உத்ரா,
ஏவிஆர்எம். மெட்ரிகுலேசன்
மேல்நிலைப்பள்ளி,
அம்பாசமுத்திரம்.





தங்கமான பீங்கான்

ஜெர்மனியைச் சேர்ந்த ஜோஹான் போட்ஜர் என்பவர் செயற்கையாகத் தங்கம் தயாரிப்பவர் என்று கேள்விப்பட்டு அந்நாட்டு அரசன் சாக்சனி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்து தங்கம் செய்து தருமாறு வற்புறுத்தினான்.

உண்மையில் போட்ஜெர் தங்கம் செய்யும் முயற்சியில் தோல்வி கண்டவர். சிறைச்சாலையைச் சோத னைக் கூடமாக்கி அவர் பீங்கானைக் கண்டுபிடித்தது பெரும் சாதனையாக அமைந்தது. அக்காலத்தில் பீங்கானுக் குத் தங்கம் போல மதிப்பிருந்தது.

– ஆர். ஆர். பூபதி, கன்னிவாடி.

திருக்குறளில் 1330 குறள்கள் உள்ளன என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் அதில் 14000 சொற்களும், 42,194 எழுத்துகளும் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆதாரம்: பொது அறிவுக் குவியல்!


பி. தியாகராஜன்,
போளூக்குறிச்சி.

1958ஆம் ஆண்டு பெற்றிருக்கிறான். ஒலிம்பிக் பந்தயத்தில் தொடக்கம் முதல் இன்று வரை இவனை விட வயது குறைந்தவர்கள் இடம் பெறவேயில்லை. இந்த வகையில் இச்சிறுவன் உலக சாதனை நிகழ்த்தி யிருக்கிறான்.







(1)




(2)



(3)



(4)




காகிதத்தில் கலைவண்ணம்

வெளவால்


சென்ற மாதம் காகிதத்தில் கலைவண்ணம் பகுதி இடம் பெறாதது குறித்து கடிதம் எழுதிய வாசகர்கள் மகிழ, இந்த மாதம் வெளவால்!

1. சதுர வடிவத் தாள் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

(5)



(6)



2. தாளை மேலிருந்து கீழ் நோக்கி மடியுங்கள்.

3. வலப் பக்கம் இடப் பக்கத்தைத் தொடும்படி மடியுங்கள். இப்போது சின்ன சதுரம் கிடைக்கும்.

4. படம் 4-ல் காட்டியபடி மடிக்கப்பட்ட ஒரு சதுரத்தை முக்கோணமாக மடியுங்கள்.

5. அதே போல் பின்புறத்தையும் மடிக்கவும்.


6. படம் 6-ல் காட்டியபடி மேல் பகுதியின் வல, இட பக்கங்களை உட்புறமாக மடியுங்கள்.


7. படம் 7-ல் காட்டியபடி இரண்டு பக்கத்திலும் சிறிது வெட்டுங்கள்.

8. மேல் உள்ள முனையை கீழ் நோக்கி மடியுங்கள்.


9. இதோ வெளவால் தயார்.

(7)





(8)



(9)


தீரசேனன் வென்ற திகில் மலை! -4
கதை : விஜி
படம் : தாமரை
அரக்கன் மடிந்த பிறகு எவ்வித இடையூறும் இல்லாமல் குடுவையில் அற்புத நீரை எடுத்துக் கொண்டு புறப்படும் போது...
நீங்கள் யார்?
என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.
நான் பக்கத்து நாட்டு இளவரசி ராகினி தேவி. அரக்கன் என்னைச் சிறைப்படுத்தி வைத்திருந்தான்.
எப்படி அரக்கனிடம் அகப்பட்டீர்கள்?
பௌர்ணமி அன்று இரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறந்த பெண்ணை மணக்க விரும்பினான் அரக்கன்.
ஏன்?
அப்படி மணந்தால் அவனுக்கு அழிவே கிடையாதாம்!
நான் பௌர்ணமி அன்று பிறந்தவள். சென்ற திருவிழாவின் போது மானிட வேடம் பூண்டு என்னை கடத்தி வந்து விட்டான்.


மணம் முடித்தானா?
அடுத்த மாதம் அமாவாசையன்று பூஜை செய்து மணம் முடிக்க விரும்பினான். நல்லவேளை. தாங்கள் வந்து அவனை அழித்து விட்டீர்கள்.
முதலில் எங்கள் நாட்டிற்கும் செல்வோம். அற்புத நீரைக் கொடுத்து விட்டு உங்களை உங்கள் தந்தையிடம் சேர்ப்பிக்கிறேன்.
நீண்ட காலமாக என்னைக் காணாமல் என் தந்தை வருந்திக் கொண்டிருப்பார். மலையடிவாரம் வரை அழைத்துச் சென்றால் போதும். அங்கிருந்து சென்று விடுவேன்.
கிளம்பலாமா?
இந்த மோதிரத்தை வைத்துக் கொள்ளுங்கள். எப்போது வேண்டுமானாலும் எங்கள் நாட்டிற்கு வரலாம்.
இருவரும் பூதத்தின் மேல் ஏறிக் கொண்டனர். நீண்ட பயணத்துக்குப் பின் மலையடிவாரத்தை அடைந்தனர்.
இளவரசே! எனக்கு விடை கொடுங்கள்.
உன் உதவியை ஒருநாளும் மறக்க மாட்டேன். நன்றி.
பூதம் புறப்பட்டது.



மீண்டும் பெரியவரைச் சந்தித்தான் தீரசேனன்.
ஐயா! தங்களால்தான் அற்புத நீர் கிடைத்தது. மிக்க நன்றி.
உன் இரக்க குணத்திற்கு நான் அளித்த பரிசு.
ஐயா எனக்கு இன்னொரு உதவி வேண்டும்.
கேள் தீரசேனா!
என் சகோதரர்கள் அற்புத நீரைத் தேடி வந்தார்கள். அவர்களைப் பற்றி...?
ஓ! அவர்கள் உன் சகோதரர்களா?
ஆம்!
அவர்கள் மரமாக நின்று கொண்டிருக்கிறார்கள்.



என் பொருட்டு அவர்களைத் தாங் கள் மன்னிக்க வேண்டுகிறேன்.
அவர்களிடம் நீ எச்சரிக்கையாக இருக்க வேண் டும்.
அவர்களால் எனக்கு எதுவும் நேராது.
மரமே பழைய நிலைக்கு வா!
இருவரும் தீரசேனன் முன் நின்றார்கள்.
தீரசேனா எங்களைக் காப் பாற்றினாய்!
இந்தப் பெரியவர்தான் உங்களைக் காப் பாற்றினார்.
பெரியவரிடம் மன்னிப்புக் கேட்டனர். அங்கிருந்து கிளம்பத் தயாரானார்கள்.
இளவரசே! நான் என் நாட்டிற்குச் செல்கிறேன்.
இவர்கள் இருவரும் என் சகோதரர்கள்.
எங்களால் முடியாததை தீரசேனன் சாதித்து விட்டானே!
வணக்கம். வருகிறேன்.
தொடரும்

விலங்குகள்!

மிகப் பெரிய நீர் விலங்கு – நீலத் திமிங்கலம்

மிகப் பெரிய நில விலங்கு – ஆப்பிரிக்க காட்டு யானை,

இக்காலத்தில் வாழும் மிக உயரமான விலங்கு – ஒட்டகச் சிவிங்கி,

குரல் இல்லாத (கொடுக்காது) விலங்கு – ஒட்டகச் சிவிங்கி,

நீர் குடிக்காத விலங்கினம் - கங்காரு எலி, கோலா கரடி,

நீண்ட காலம் வாழும் விலங்கினம் – ஆமை,

தன் உடலை விட நீளமான நாக்கை உடைய விலங்கு – பச்சோந்தி,

மனிதனைத் தவிர நிறங்களை வேறுபடுத்தி அறியும் ஆற்றல் உள்ள விலங்கினம் – வாலில்லா குரங்கு,

பறக்கும் பாலூட்டி – வௌவால்,

பற்கள் இல்லாத பாலூட்டி – பேங்கோலின் எனப்படும் எறும்பு தின்னி,

உடலை விட நீளமான வால் கொண்ட விலங்கு – குரங்கு,

முற்றிலும் அழிந்து விட்ட விலங்கினம் – டைனோசர்,

அழியக்கூடிய நிலையில் இருக்கும் விலங்கினம் – சிங்கவால் குரங்கு.

– டி.ஜோஷ்வின்,
ஐரேனிபுரம்.



குறளைக் கற்றதனால்

படிப்பதும் ஏன்? பயன்கள்
என்ன
படிப்பதனாலே — என்று
பகுத் தறிந்து பார்த்த வர்கள்
எனக்குச் சொல்லுங்கள்

பொருள் இல்லார்க்கு இவ்
வுலகம்
இல்லை என்பதால் — அந்தப்
பொருளைத் தேடிப்
பெறுவதுதான்
படிப்பின் நோக்கமா?

அறிவுடையார் எல்லாம் உடையார்
என்பத னாலே — அந்த
அறிவைத் தேடிப் பெறுவது தான்
படிப்பின் நோக்கமா?

இயற்கை யையும் ஏவல்
கொள்ளச்

கூண்டிற்குள் என்ன?

இங்குள்ள இரண்டு படங்களையும் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். கூண்டிற் குள் இருக்கும் வெள்ளை நிறக் கோட்டை மட்டும் (1 முதல் 9 வரை)பிளேடால் வெட்டி எடுத்து விடுங்கள். பின் இரண்டு படங்களையும் தடிமனான தனித் தனி தாளில் ஒட்டி விடுங்கள். கூண்டிற்கு இருபுறமும் உள்ள AB கோடுகளை நேராக வெட்டுங்கள். இந்த வெட்டிய பகுதிக்குள் முதல் படத்தில் AB பகுதிகளை நுழைத்து விடுங்கள். இப்போது AB பகுதியை முன் னும் பின்னும் அசைக்கவும் என்ன தெரி கிறது? கூண்டிற்குள் வரிக்குதிரையும் கொரில்லாவும் மாறி மாறி தெரி கிறதல்லவா!

— கே.எஸ். ராமமூர்த்தி,
திருவல்லிக்கேணி.



கண்டுபிடியுங்கள்!

ஆய பயன்...

சக்தி தருவதால் — நாம்
என்றும் அந்தச் சக்தி பெறப்
படிக்க வேண்டுமா?

ஆமாம் ஆமாம் ஆமாம் ஆமாம்
படிப்பின் நோக்கங்கள் —
இன்னும்


ஆயிர மாய் அடுக் கடுக்காய்
இருக்கும் என்றாலும்...

படைத்துக் காத்து வழி நடத்தும்
பகவன் பாதத்தை — நாம்
பற்றிக் கொள்ளப் பயிலு வதே
படிப்பின் நோக்கமாம்!

— ரா. பொன்ராசன்

கற்றதனால் ஆய பயன்
என்கொல் — வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

செய்து பாருங்கள்!




வால் கோட்டை!

இலங்கேஸ்வரனான இராவணனுக்குப் பாதாள லோகத்தில் மயில் ராவணன் என்று ஒரு தம்பி இருந்தான். அவனும் தவம் செய்து அஷ்டமா சித்திகளையும் கற்றிருந்தான்.

அவனிடம் ஒரு மாயக் கண்ணாடி இருந்தது. மயில்ராவணன் யாரை நினைத்துக் கொண்டு பார்த்தாலும் அவர் நினைப்பதை அது சொல்லிவிடும்.

இலங்கையில் ராம-ராவண யுத்தம் மும்முரமாக இருந்த நேரம் அது. மாயக் கண்ணாடியில் இராவணன் நிலையைத் தெரிந்து கொள்ளப் பார்த்தான் மயில் ராவணன்.

'இந்த விபீஷணன் உடன் பிறந்தே கொல்லும் வியாதியாகி விட்டானே! 'தம்பியுடையோர் படைக்கஞ்சார்' என்ற முதுமொழி பொய்யாகி விட்டதே! என்று இராவணன் வருந்துவதைக் கண்டான்.



மறு விநாடி தமையன் முன் நின்றான் மயில் ராவணன். "அண்ணா, ராம லட்சுமணர்கள் உயிரோடு இருந்தால் தானே யுத்தம்! என் மாயா ஜாலத்தால் அவர்களைத் தூக்கிப் போய் காளிக்கு பலி கொடுக்கிறேன். கவலைப் படாதீர்கள்" என ஆறுதல் சொன்னான்.

மயில் ராவணன் சொன்னதை பட்சி வடிவில் கேட்டுக் கொண்டிருந்த விபீஷணர், பறந்து வந்து வானர வீரர்களுடன் அமர்ந்திருந்த ராம

லட்சுமணர்களிடம் சொன்னார்.

ஆஞ்சனேயர் கோபத்துடன் "மாய வேலைகள் நமக்கும் தெரியும். நான் வாலால் கட்டும் கோட்டைக்குள் நீங்கள் இருவரும் இருக்க வேண்டும்" என்று ராமலட்சுமணர்களை வேண்டினார்.

இருவரும் ஒப்புக் கொண்டனர்.

தூது சென்றபோது இராவணனுக்கு சமானமாக வாலினால் ஆசனம் அமைத்துக் கொண்ட மாருதி இப்போது வாலினால் பெரிய கோட்டை எழுப்பிவிட்டார்.

கோட்டைக்குள் ராமலட்சுமணருக்குக் காவலாக சுக்ரீவனும், அங்கதனும் உருவிய வாளோடு நின்றனர். கோட்டை வாசலில் ஆஞ்சனேயர் காவலிருந்தார். இடைவிடாமல் கோட்டையைச் சுற்றி வந்தார் விபீஷணர். கோட்டையின் உச்சியில் சுதர்சனச் சக்கரத்தைப் பதித்திருந்தனர்.



ஒருமுறை விபீஷணர் சுற்றிவர ஆகும் நேரத்தைக் கணக்கிட்டான் தூரத்தில் ஒளிந்திருந்த மயில் ராவணன். ஆஞ்சனேயர் பார்வையிலிருந்து விபீஷணர் மறைந்ததும் தசரதர் வடிவத்தில் ஆஞ்சனேயர் முன் வந்தான்.

"நீதான் வாயு குமாரன் அனுமானா? வாலினால் கோட்டை கட்டி என் பிள்ளைகளைப் பத்திரமாய் பாதுகாக்

ஆர். பொன்னம்மாள்



''எதைத்தான் கடன் கேக்கறதுங் கறது'க்கு விவஸ்தை இல்லாம போயிடுச்சு!''

''எதைக் கேட்டார்?''

''கடன் கேட்காதீர்' என்ற போர்டை கடன் கேட்கிறார்!''

— ஜூனியர் தேஜ்

கிறாய் என்று கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. இந்தக் கோட்டையில் உன் அனுமதி இன்றி எவர் நுழைந்தாலும் எரிந்து போய் விடுவார் களாமே! என் புதல்வர்களைப் பார்க்க நீ அனுமதித்தால் போகிறேன். இல்லையேல் திரும்பிப் போகிறேன்'' என்றான்.

ஆஞ்சனேயருக்குப் பரபரப்பாய் இருந் தது. ''அயோத்தி மன்னர் தசரதச் சக்கர வர்த்தியா? நீங்கள் இறந்து விட்டதாய் சொன்னது வதந்தியா? நிற்கிறீர்களே! என் பிரபுவின் தந்தையான நீங்கள் என்னிடம் அனுமதி கேட்பதா?'' என்றார்.

அதே சமயம் தூரத்தில் எவரோ ஆஞ்சனேயரிடம் பேசிக் கொண் டிருப்பதைப் பார்த்த விபீஷணர் விரைந்து வந்தார். விபீஷணரைக் கண்ட தசரதர் (மயில் ராவணன்) மறைந்து விட்டார்.

''அனுமானே! உன்னோடு பேசிக் கொண்டிருந்தது யார்?'' என்று விபீஷணர் படபடத்த மனதுடன் கேட்டார்.

''தசரதச் சக்கரவர்த்தி! குமாரர்களைப் பார்க்க உத்தரவு கேட்டார். காணோமே! என் சாமர்த்தியத்தை மிகவும் பாராட்டினார்'' என்றார் அனுமார்.

''வந்தது நிஜ தசரதராய் இருந்தால் ஏன் மறைகிறார்? மயில் ராவணன் நினைத்த உருவம் எடுக்கும் மாயாவி. இனியும் ஏமா றாதே'' என்று எச்சரித்தார் விபீஷணர்.

ஆஞ்சனேயருக்கு ஏமாந்து விட் டோமே என்று மிகவும் வருத்தமாக இருந்தது. மறுபடி விபீஷணர் கோட்டையைச் சுற்றினார்.

அவர் மறைந்ததும் விபீஷணர் உரு விலேயே வந்தான் மயில் ராவணன்.

''ஏன் சுற்றாமல் திரும்பி விட்டீர்கள்?'' என்று கேட்டார் ஆஞ்சனேயர்.

''மறுபடி எந்த வடிவத்தில் அந்த மாயாவி உன்னை ஏமாற்றப் போகிறானோ என்று கவலையாக இருக்கிறது. எதற்கும் ராம லட்சு மணர்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லி 'யார் வந்து கூப்பிட்டாலும் போக வேண் டாம் என்று எச்சரித்து விட்டு வரட்டுமா? அப்போதுதான் மனம் அமைதியாகும்'' என்றான் மயில் ராவணன்.

''சரி; போங்கள் என்றார் மாருதி. ''கவனமாக இரு'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார் போலி விபீஷணர்.

சிறிது நேரத்தில் நிஜ விபீஷணர் கோட்டையைச் சுற்றிக் கொண்டு வந்தார். ஆஞ்சனேயர் திகைத்தார்.

''எப்போது கோட்டைக்குள்ளேயிருந்து வெளி வந்து சுற்ற ஆரம்பித்தீர்கள்?'' என்று கேட்டார். விபீஷணர் திடுக்கிட்டு, ''நான் கோட்டைக்குள் எப்போது போனேன்? ஐயையோ! அந்த மயில் ராவணன் என் வடிவத்தில் வந்து உன்னை ஏமாற்றி விட்டானா?'' என்று பதறியபடி கோட் டைக்குள் ஓடினார். ஆஞ்சனேயரும் பதட்டத்துடன் பின் தொடர்ந்தார்.

அங்கே சுக்ரீவனும், அங்கதனும் மயங் கிக் கிடந்தனர். ராமலட்சுமணர்களைக் காணவில்லை. ராமர் இருந்த இடத்துக்குக் கீழே பெரிய பள்ளம் காணப்பட்டது.

ஆஞ்சனேயர் ஆவேசத்துடன் ''என்னை மோசம் செய்த அந்த மயில் ராவணனைப் பழிவாங்கியே தீருவேன். பிரபுவை மீட்டுக் கொண்டு வருவது என் பொறுப்பு'' என்றபடி வண்டாக மாறி பூமி யைத் துளைத்துக் கொண்டு பாதாள லோகம் சென்றார். அங்கு காளி கோயிலில் கட்டுண்டு கிடந்த ராமரைக் கண்டுபிடித்தார்.

''ஸ்வாமி! இப்படி ஆகி விட்டதே!'' என்று அனுமார் வருந்த, ''துஷ்டர்களை முழுமையாக அழிக்கவே அவனுக்குக் கட்டுப்பட்டு இங்கு வந்தேன். நீ வண்

டாகவே காளி தேவியின் பாதத்தடியில் இருந்து நடப்பதைப் பார். நான் கண் அசைத்ததும் காளியின் வாளால் இந்த துஷ்டனை வீழ்த்திவிடு" என்றார் ராமர்.

அதன்படியே காளியின் பாதாரவிந்தங்களில் காத்திருந்தார் ஆஞ்சனேயர்.


"ஹஹ்ஹா...! மனிதர்களா என் தலைமையனை வெல்வது! காளி மாதாவை சாஷ்டாங்கமாய் வணங்குங்கள்" என்று கொக்கரித்தான் மயில் ராவணன்.

"நான் காட்டிற்கு வந்து மாமாங்கமாகி விட்டது. சாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பது எப்படி என்றே மறந்து விட்டேன். நீங்களும் மாதாவை வணங்குவது குற்றமல்லவே! நீங்கள் முதலில் நமஸ்கரியுங்கள். பிறகு அதைப் பார்த்து நாங்கள் வணங்குகின்றோம்" என்றார் ராமர்.

அரக்கன் காளிமுன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். ராமர் காளி மாதாவின் காலடியில் காத்திருந்த ஆஞ்சனேயரை நோக்கிக் கண் அசைத்தார்.

ஒரு நொடியில் விஸ்வ ரூபம் பெற்று காளியின் கையிலிருந்த வாளை உருவி அரக்கன் சிரசை வெட்டித்தள்ளினார் அனுமார். எங்கும் பயக்கூச்சல், அனுமாரின் கோபமான விஸ்வரூபத்தைக் கண்டு பயந்து ஜனங்கள் நாலா பக்கமும் ஓடினர்.

ராம லட்சுமணர்களைத் தோளில் சுமந்து கொண்டு பூமியைத் துளைத்துக் கொண்டு பாசறைக்கு வந்தடைர் ஆஞ்சனேயர்.



"எலி குணம் என்கிட்ட நிறைய இருக்குன்னு குமார் சொல்றாண்டா!"

"ஆமாம்! குழி பறிக்கிறதுலேதான் நீ பலே கெட்டிகாரனாச்சே!"

— காழி ஆர். சீதாராமன்

சுற்றுலாத் தலங்களைக் கண்டுபிடியுங்கள்! — போட்டி முடிவு

மிகவும் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களைத்தான் போட்டியாக அறிவித்திருந்தோம். பள்ளிகளிலும் இத்தலங்களைப் பற்றிய பாடங்கள் இருப்பதால் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவீர்கள் என்று நினைத்தோம். ஆனால் மிகவும் குறைவானவர்களே இப் போட்டியில் பங்குபெற்றுள்ளார்கள். அதிலும் தவறான விடைகளையே அதிகம் பேர் தந்திருக்கிறார்கள். எனவே சரியான விடை எழுதிய ஐந்து பேர் மட்டும் பரிசு பெறுகிறார்கள்.

ரூபாய் முப்பது பரிசு பெறுவோர் :

1. வி.சி. பிரபா, ஏழாம் வகுப்பு, காந்தி நூற்றாண்டு காலனி, வேலூர்.

2. ஆர். மணிகண்டன், பத்தாம் வகுப்பு, கற்பகம் நகர், சீர்காழி.

3. ஜெ. ரத்ன தீபா, நாராயண நகர், சேலம் — 15.

4. சி. ஆர். இராஜகோபாலன், ஹட்கோ காலனி, டாடாபாத், கோவை.

5. பி. மைதிலி, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மேல்கரை, மானாமதுரை.

சரியானது விடை :

1. டில்லி - செங்கோட்டை.
2. சிதம்பரம் - நடராஜர் கோயில்.
3. மைசூர் - மகாராஜா அரண்மனை
4. மதுரை - மீனாட்சி அம்மன் கோவில்.
5. குதுப்மினார்
6. புனித பிலோமினா சர்ச்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

குச்சி, வைக்கோல், இலைகளை வைத்து கூடு கட்டும் பறவைகளை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் தங்கள் கூட்டை மண்ணால் கட்டி வாழ்க்கை நடத்துகின்றன ஹவுஸ் மார்ட்டின் (House Martin) எனப்படும் குருவிகள்.

இக் குருவிகள் உருவில் சிறியவை. தூக்கணாங் குருவி வகையைச் சேர்ந்தவை. இரண்டிற்கும் பிளவு பட்டது போல் வால் இறகு காணப்படும்.

கறுமை கலந்த நீல நிறத்தில் தலையும் முதுகும் அமைந்திருக்கும். உடல் மற்றும் இறக்கைகளின் அடிப்புறத்தில் வெண்மையாக இருக்கும்.

இக் குருவிகள் குளிர்க்காலங்களில் ஆப்பிரிக்காவில் பொழுதைக் கழிக்கின்றன. ஏப்ரல் மாதத்தில் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்து முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன.

பொதுவாக நகரங்கள், கிராமங்களில் வசிக்கும் இக் குருவிகள் நல்ல நீர் நிலை உள்ள இடங்களை குறிப்பாக தேர்ந்தெடுத்து தங்குகின்றன.

பெண் குருவிகள் நான்கு முதல் ஐந்து வரை வெள்ளை நிற முட்டைகளை வருடத்திற்கு மூன்று முறை இடுகின்றன.

அம்மாவும் அப்பாவும் சேர்ந்தே குஞ்சு பொரியும் வரை அடைகாக்கின்றன. பத்தொன்பது நாட்களில் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவருகின்றன.

அம்மா, அப்பா குருவிகள் தங்கள் குஞ்சுகளை நன்றாக கவனித்துக் கொள்கின்றன. னி அதிகம் சாப்பிடும்



மண்

கூடு கட்டும் குருவி!

எஸ். சுஜாதா



குஞ்சுகள் இருபத்தி ஐந்து நாட்களில் பறப்பதற்கு தயாராகி விடுகின்றன.

சில இளம் குருவிகள் தங்கள் கூட்டிலேயே நீண்ட காலம் தங்கி மற்ற சிறிய குஞ்சுகளுக்கு உதவி செய்கின்றன.

சில குஞ்சுகள் நிரந்தரமாக கூட்டில் தங்கி விடுவதும் உண்டு. சிறிய கூட்டில் பதிமூன்று குஞ்சுகள் வரை வாழ்க்கை நடத்துகின்றன.

இவற்றின் கால்கள் மிகவும் குட்டையானவை. இதனால் நிலத்தில் நடக்கக் கஷ்டப்படுகின்றன. இதனால் நிலத்தில் வந்து தங்குவதில்லை. எப்பொழுதாவது கூடு கட்டும் போது நிலத்திற்கு வந்து மண்ணையும், வைக்கோலையும் எடுத்துச் செல்கின்றன.

இவை கூட்டமாகச் சென்று உணவு தேடுகின்றன. பறக்கும் பூச்சிகளில்

❁ இக் குருவிகள் குழுக்களாக வசிக்கின்றன. மிகப் பெரிய குழு பிரிட்டனில் உள்ள ஆட்சம் பாலத்தில் காணப்படுகிறது. இங்கு 1930-ஆம் ஆண்டில் கூடு கட்டி வாழ ஆரம்பித்தன குருவிகள். இன்று 400 கூடுகள் பாலத்தின் அடியில் காணப்படுகின்றன.



❁ இளம் குஞ்சுகள் கூட்டிற்குள் மிகவும் பாதுகாப்பாக இருக்கும். ஏனென்றால் கூட்டின் நுழைவாயில் சிறிதாக இருப்பதால் எதிரிகள் உள்ளே நுழைந்து குஞ்சுகளைக் கடத்திச் செல்வது மிகவும் கடினம்.

* கூடுகளை கட்டிடங்களின் மேல்தளத்தின் அடிப்புறத்திலும், பாலங்கள், பாறைகளின் அடியிலும் அமைத்துக் கொள்கின்றன.

* கூண்டு போன்ற வடிவத்தில் ஈரமான மண், வைக்கோல்களை வைத்து கூடுகளை உருவாக்குகின்றன. கூட்டின் மேற்புறத்தில் சிறிய வழி இருக்கும். மண் காய்ந்ததும் பசை போல் கூடு ஒட்டிக் கொண்டு விடும்.



குறிப்பாக ஈ, வண்டு, விட்டில் பூச்சிகளே பிடித்தமான உணவு. சுத்தமான தண்ணீரைப் பருகுவதற்கும், கூடு கட்டுவதற்கும் பயன்படுத்துவதால் ஆறு மற்றும் ஏரிகளுக்கு அருகிலேயே வாழ்க்கை நடத்துகின்றன.

* முட்டையிலிருந்து வெளிவந்த குஞ்சுகள் நிறைய உணவுகளை சாப்பிடுகின்றன. இதனால் இவை வேகமாக வளர்ந்து முழு வளர்ச்சி அடைந்து விடுகின்றன.
* குஞ்சுகள் பசிக்கும் போது தங்கள் பெற்றோர்களை சத்தம் கொடுத்து அழைக்கின்றன.

கோகுலம் க்விஸ்

1. மார்ட்டின்களின் வால் இறகு எப்படி இருக்கும்?
2. எங்கெங்கு கூடுகளைக் கட்டுகின்றன?
3. கூடு எந்த வடிவத்தில் இருக்கும்?
4. நிலத்திற்கு எதற்காக வருகின்றன?
5. முட்டையிலிருந்து குஞ்சுகள் எத்தனை நாட்களில் வெளிவருகின்றன?
6. உணவு என்ன?

விடை :

1. பிளவுபட்டது போல் காணப்படும்.
2. கட்டிடங்கள், பாலங்கள், பாறைகளின் அடிப்புறத்தில் கூடுகளைக் கட்டுகின்றன.
3. கூண்டு வடிவில் இருக்கும்.
4. கூடு கட்டுவதற்கு தேவையான மண், வைக்கோல்களை எடுத்துச் செல்ல வருகின்றன.
5. 19 நாட்களில் வெளிவருகின்றன.
6. ஈக்கள், விட்டில் பூச்சிகள், வண்டுகள்.




உலகிலேயே மிகக் குறைவான எழுத்துகள் உள்ள மொழி ஹவாய் மொழிதான். அதில் 12 எழுத்துகளே உள்ளன.

ஹங்கேரி நாட்டுக் கொடி நம் தேசியக் கொடி போன்றதுதான். ஆனால் அதில் அசோகச் சக்கரம் கிடையாது.

ஜீவராசிகளில் முதலைக்கு மட்டும் எத்தனை முறை பல் விழுந்தாலும் மறுபடியும் முளைத்து விடும்.

ஆதாரம் : பொது அறிவுக் குவியல்

தகவல் : பி. தியாகராஜன்.



நகைச்சுவைப் போட்டி


வாசகர்களின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த மாதம் நகைச்சுவைப் போட்டி! ஜோக்குகள் சிறுவர் பத்திரிகையான கோகுலத்தில் வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியும் தரவும். ஒருவரே எத்தனை ஜோக்குகள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். கண்டிப்பாக முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள்.

முடிவு தேதி : 31.10.98


அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியை அவசியம் தர வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் ஜோக்குகளுக்குப் பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097.

கோலப் போட்டி முடிவுகள்



வி. ஹேமா,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.







ரத்ன தீபிகா,
ஆறாம் வகுப்பு,
அரிமா மேல்நிலைப்பள்ளி,
சிவகாசி.


வி. விக்ரம்,
எட்டாம் வகுப்பு, ஐ.ஐ.டி, சென்னை.

என். தனலட்சுமி,
கிருஷ்ணகிரி (அஞ்சல்) தர்மபுரி
மாவட்டம்.




எம். பத்மாவதி,
ராயக்கோட்டை ரோடு, ஓசூர்,






அ. காயத்ரி,
மஞ்சக்குப்பம், கடலூர்




கே.பி. வைஷ்ணவி
குரோம்பேட்டை, சென்னை.



லக்ஷ்மி ஐஸ்வர்யா,
மகாதானபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

ச. துளசி மணி,
ஒன்பதாம் வகுப்பு,
ஓ.சி.பி.எம். பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
கோரிப்பாளையம், மதுரை.





பி. சரண்யா,
பன்னிரெண்டாம் வகுப்பு,
குரு ஞான சம்பந்தர்,
உயர்நிலைப்பள்ளி,
மயிலாடுதுறை.

ஒன்பதாம் வீடு!

14. அப்பாவின் கனவு!

சிநேகிதிகள் சித்ராவின் வீட்டில் கூடியிருந்தனர்.

"முதல் பரிசு பெற்ற ஓவியத்தின் படத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டாள் பவானி.

"பார்த்தேனே, நன்றாகத்தானே இருக்கு" என்றாள் சித்ரா.

"அடி மக்குப் பிளாஸ்திரி! ஓவியக் காட்சியில் உன்னுடைய ஓவியம் ஒன்று காணாமல் போச்சே... நினைவிருக்கா?" – பாத்திமா மடக்கினாள்.

"ஏன் நினைவில்லாமல்? பெரிய மேடம் கூட அதை மிகவும் விரும்பினாங்க என்பதற்காகத்தானே பலரும் விலைக்குக் கேட்டப்போ 'விற்பனைக்கு இல்லைன்னு' எழுதி வைச்சோம்?"

"இந்த விஜயாதான் அதை எப்படியோ திருடி, இந்தப் போட்டியில் தான் வரைந்ததாகக் காட்டி பரிசு வாங்கியிருக்கா."

"திறமையை மதிக்கவும் பாராட்டவும் பழகுங்கடி. ஏற்கெனவே வரைந்த படத்தைப் போட்டியிலே அங்கேயே போட்ட மாதிரி மாற்றித் தருவது இயலாத காரியம்."

"இத்தனை பேர் இருந்தும் எல்லோர் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு படத்தைத் திருடிக் கொண்டு போன பலே கைகாரிக்கு, ஏற்கெனவே போட்ட படத்தை, அங்கேயே போட்ட மாதிரி மாத்திக் கொடுக்கிறது பெரிய காரியமா?"

"இவள்கிட்டே சொல்லிப் பயனில்லைடி. இது பித்துக்குளி. இவளுக்குப் படம் வரைய மட்டும்தான் தெரியும். பெரிய மேடத்திடம் சொல்லுவோம். அப்புறம் அவங்க பாடு!"

சிநேகிதிகள் பட்டாளம் கிளம்பிப் போன அடுத்த அரை மணிக்கெல்லாம் பெரிய மேடம் வந்து விட்டார். பசுபதி அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்.

"பசுபதி, முதல் பரிசு பெற்ற ஓவியத்தைப் பார்த்தீர்களா?" என்று தொடங்கிய பெரிய மேடம், அது சித்ரா எழுதி, காட்சியில் காணாமல் போன அதே ஓவியம்தான் என்பதை அடித்துச் சொன்னார்.

"சித்ரா விஜயா இருவருமே எனது மாணவிகள்தான். இருவரின் குணமும், திறமையையும் நான் நன்கு அறிவேன். சித்ராவின் திறமையைத் திருடி அநியாயமாக அடைந்துள்ள புகழ் இது. இதை அனுமதிக்கக் கூடாது."

"மேடம் உங்கள் மனக்கொதிப்பை என்னால் உணர முடிகிறது. ஆனால் இப்பொழுது நம்மால் என்ன பண்ண முடியும்?" பரிசு பெற்ற ஓவியம் டில்லியில் பத்திரமாக இருக்கிறது. இங்கிருந்தபடி அது சித்ரா வரைந்ததுதான் என்பதை எப்படி நிரூபிப்பீர்கள்?" என்று கேட்டார் பசுபதி.


"விஜயாவையே அழைத்து மிரட்டிப் பார்ப்போம்."

"இது பலிக்காமலும் போகலாம். இதையெல்லாம் எதிர்பார்க்காமலா விஜயா இந்த மோசடியில் துணிந்து இறங்கியிருப்பாள் என்று நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் பசுபதி.

"முயன்று பார்ப்பதில் தவறு இல்லையே?"

பசுபதி ஒருவழியாக ஒப்புக் கொண்டார். "இருவருமே எனது மாணவிகள். அதனால் நான் தலையிடுவது நன்றாக இராது. நீங்கள் பாதிக்கப்பட்டவர். அதனால் நீங்களே நேராக விஜயாவின் தந்தையை சந்தித்துக் கேளுங்கள்."

பசுபதி வேறு வழியின்றி விஜயாவின் வீட்டுக்குக் கிளம்பினார். விஜயாவின் அப்பா, பசுபதியை வரவேற்று சித்ராவுக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது பற்றித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். விஜயாவும் கூடவே இருந்தாள். அவள் முகத்தில் இருந்த கலக்கத்தைக் கவனிக்கப் பசுபதி தவறவில்லை.



பசுபதி நேரடியாக விஷயத்திற்கு வந்தார். அவர் ஆரம்பித்ததுமே விஜயாவின் தந்தை கோபாவேசமடைந்தார். 'உலகத்துலேயே தலை சிறந்த, வளரும் ஓவியராக இருக்கக் கூடிய தகுதி உன் பெண்ணுக்கு மட்டும்தான் இருக்குமா? வேறு யாருக்குமே கிடையாதா? கொண்டாட மனிதர்கள் இருந்தால் கழுதையைக் கூட பஞ்சகல்யாணிக் குதிரை என்றுதான் உலகம் சொல்லும். இது என் பெண்ணை அவமானப்படுத்தும் குற்றச்சாட்டு என்பதோடு, போட்டியை நடத்திய சங்கத்தையும் நடுவர்களையும் கூட அவமதிக்கும் விஷயம். இதை நான் சும்மா விடப் போவதில்லை'' என்று குதியோ குதியென்று குதித்தார்.

"நானும் சும்மா விடப் போவதில்லை. அதைக் கூறிவிட்டுப் போகத்தான் வந்தேன்" என்று கிளம்பினார் பசுபதி.

நாலு வீடு கூடத் தாண்டியிருக்க மாட்டார். கால் செருப்பு உறுத்தியது. குனிந்து பார்த்தார். செருப்பு அவருடையது இல்லை. விஜயா வீட்டிலிருந்து மாற்றிப் போட்டுக் கொண்டு வந்து விட்டார். திரும்ப விஜயா வீட்டுக்கு வந்தார்.

கதவு மூடியிருந்தது. பசுபதி படியேறும்போது உள்ளே விஜயா தன் தந்தையுடன் பேசுவது தெளிவாகக் கேட்டது.

"கண்டுபிடிச்சுட்டாங்களேப்பா" – இது விஜயாவின் குரல் பதற்றத்துடன்.

"இருக்கட்டுமே. அவங்களால எப்படி நிரூபிக்க முடியும்? பரிசை அறிவிச்ச பிறகு அதை மறுபரிசிலனை செய்வதே சங்கத்துக்குப் பெரிய அவமானம். அத்தனை எளிதாக விட்டுக் கொடுத்து விட மாட்டார்கள். தைரியமாக இரு" – இது விஜயாவின் அப்பா குரல்.

"கொஞ்ச நாள் முன்பு வரை இவருக்கு தன் பெண் சித்ரா படம் வரைந்தால் பொறுக்கவே பொறுக்காது. அப்பாவுக்கும் பெண்ணுக்கும் மௌன யுத்தமே நடக்கும். சித்ரா வரைவதைப் பார்த்தால் கிழிச்சுப் போட்டு விடுவார். அப்படிப்பட்ட ஓவிய எதிரி, எப்படி இப்படி மாறினார் என்பது அதிசயமா இருக்கு!"

சிறிது பொறுத்து கதவைத் தட்டி, அணிந்திருந்த செருப்பை விட்டு விட்டுத் தமது செருப்பை மாட்டிக் கொண்டு திரும்பினார் பசுபதி.

விஜயா பேசியதில் இருந்து அவருக்கு ஒன்று உறுதியாகத் தெரிந்தது. பரிசு பெற்ற ஓவியம் உண்மையில் விஜயா வரைந்தது அல்ல. அது சித்ரா வரைந்ததேதான். சித்ராவின் அருமை புரியாமல் படுத்தின பாட்டுக்கு, பரிசு பெற்ற ஓவியம் சித்ரா

வெ. நல்லதம்பி

வரைந்ததே என்பதை எப்படியாவது நிருபித்து நியாயப்படி கிடைத்திருக்க வேண்டிய முதல் பரிசை அவளுக்கே கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்ற வேகம் அவருக்கு வந்தது.

அலுவலகத்திற்கு லீவு போட்டு விட்டு, சித்ராவின் பள்ளிக்குச் சென்றார். பெரிய மேடத்தை சந்தித்தார். கோமதி போன் பண்ணி வனிதாவை வரவழைத்தார். கூடவே தமிழரசி, மற்றவர்கள். தான் செருப்பை எடுக்க மறுபடி சென்ற போது



விஜயா பேசியதை பசுபதி கூறியபோது எல்லோரும் கொதித்துப் போனார்கள். சித்ராவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று எல்லோரும் துடித்தனர். எப்படி அதைச் செய்வது என்று ஒருவருக்கும் தோன்றவில்லை.

வனிதா, பெங்களூரில் ரஹ்மானுடன் பேசி, விஷயத்தை விளக்கி, என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டார்.

"இது பெரிய பிரச்னையாகி விடும் விஷயம். தங்கள் தீர்ப்பில் தவறு ஏற்பட்டு விட்டது என்பதை சங்கம் எளிதில் ஒப்புக் கொள்ளாது. ஆனால் இப்படி ஒரு பிரச்னை எழுந்துள்ளதே அவர்களுக்கு கௌரவக் குறைவாக இருக்கும். நான் தலையிட்டால் ஏதாவது கதை கட்டி விடுவார்கள். அதனால், பசுபதியை விட்டு, முதல் பரிசு பெற்ற படம் என் பெண் சித்ரா வரைந்ததே. உடனே நியாயம் வழங்குங்கள் என்று டெல்லியில் சங்கச் செயலருக்கு தந்தி அனுப்பி விட்டு, கடிதமும் போடச் சொல்'' என்று யோசனை கூறினார் ரஹ்மான்.

தந்தியும் கடிதமும் பறந்தன. அடுத்த நாளே பதில் வந்தது. 'பரிசு பெற்ற ஓவியங்களுடன் வெள்ளிக்கிழமை சென்னை வருகிறேன். கன்னிமாரா ஹோட்டலில் தங்குகிறேன். தங்கள் குற்றச்சாட்டை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்களுடன் நேரில் வரவும்!'

வெள்ளிக் கிழமை. கன்னிமாரா ஹோட்டல் 15-ஆம் அறை. இந்திய ஓவியர் சங்கத்தின் தலைவர் வைஷ்ணவ், தம் உதவியாளர்களுடன் அவர்களை வரவேற்கக் காத்திருந்தார். பசுபதியும் சித்ராவும் போனபோது, விஜயாவும் தன் தந்தையுடன் முன்னதாகவே வந்திருந்தாள். எல்லோரும் அமர்ந்தனர்.

வைஷ்ணவ்வின் மேசை மேல் முதல் பரிசு பெற்ற சர்கா சுழற்றும் காந்தி பட

மும் இரண்டாவது பரிசு பெற்ற படமும் சட்டம் போடப்பட்டு இருந்தன.

"மிஸ்டர் பசுபதி, உங்கள் புகார் வந்தவுடன் நாங்கள் ஓவிய நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்தோம். உங்கள் புகாரின்படி முதல் பரிசு பெற்ற ஓவியத்தை வரைந்தவர், இரண்டாவது பரிசு பெற்ற உங்கள் பெண் சித்ராவேதான். இல்லையா?" - வைஷ்ணவ் தெளிவாகக் கேட்டார்.

"ஆமாம் சார். இரண்டையும் வரைந்தவள் என் பெண் சித்ராதான்" என்றார் பசுபதி.



"டெல்லியில் நிபுணர்கள் இரண்டு ஓவியங்களையும் பார்த்தார்கள். இரண்டையும் வரைந்தவர் ஒருவராகவே இருக்கக்கூடும் என்பதை அவர்கள் கூறி விட்டார்கள். ஆனால் இந்த ஒன்றை மட்டும் வைத்து, இரண்டையும் வரைந்தவள் உங்கள் பெண்ணே என்பதை ஏற்க முடியாது. காரணம், போட்டி நேரடி யாக நடத்தப்பட்டது. ஏற்கெனவே போட்டு வைத்த ஓ்வியத்தை அதில் வைத்து மாற்றியிருக்கவே முடியாது. அத னால், முதல் பரிசு பெற்ற காந்தி சர்க்கா ஓவியத்தை உங்கள் பெண்தான் வரைந்தாள் என்பதை நிரூபிக்க, மறுக்க முடியாத வேறு ஏதாவது ஆதாரங்கள் தேவை. இவை இல்லாமல் இந்தப் புகாரை ஏற்க முடியாது."

வைஷ்ணவ் முடித்ததும் பசுபதி பரிதாபமாகத் தலைகுனிந்தார். விஜயாவின் முகமும், அவள் தந்தையின் முகமும் மகிழ்ச்சியால் நிறைந்தது.

"இருப்பினும், பரிசு பெற்ற ஓவியத்தை மறுபடி வரைந்து தரும்படி விஜயா, சித்ரா இருவரையும் பணிக்கப் போகிறேன். ஓவியம் வரையத் தேவையான எல்லாம் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கின்றன. அறை எண் ஒன்பதில் விஜயா, அறை எண் பத்தில் சித்ரா, இதே படத்தை வரைந்து தரப் போகிறார்கள். நீங்கள் யாரும் கூடப் போகக் கூடாது" என்றார் மறுபடி வைஷ்ணவ்.

சித்ராவின் முகத்தில் பெரு மகிழ்ச்சி. விஜயாவின் முகத்தில் கலவரம். இருவரும் சென்றனர்.

சித்ராவுக்கு ஓவியத்தை முடிக்க நான்கு மணி நேரமானது. படம் காய்ந்ததும், டிராயிங் காகிதத்தை பறக்க விடாமல் இருக்க நான்கு ஓரங்களிலும் அழுத்தப்பட்டிருந்த டிராயிங் பின்களில் ஒன்று நன்கு அழுந்தாமல் மேலே வந்து ஓரம் சுருண்டது. சுருண்ட ஓரத்தின் பின்பக்கம், ஓவிய சங்கத்தின் ரப்பர் ஸ்டாம்ப் முத்திரை தெரிந்தது.

சித்ராவின் நினைவில் பளீரென்று ஒரு மின்னல்! பள்ளிக் கட்டட நிதிக்காக ஓவியக் காட்சி அமைக்க திட்டமிட்ட போது, முதலில் காந்தி ஒரு குழந்தையைக் கொஞ்சுவது போன்ற படத்தைத்தான் வரைய சித்ரா திட்டமிட்டு, பென்சிலால் ஸ்கெட்சும் செய்தாள். பெரிய மேடம் தான் சர்கா சுழற்றும் காந்தியாக இருந்தால் படம் அகலவாட்டில் அமைந்து அழகாக இருக்கும் என்றார். அதன்படியே அந்த ஸ்கெட்சைக் கூட அழிக்காமல், அப்படியே திருப்பிப் பின் பண்ணி, சர்க்கா சுழற்றும் காந்தியைப் போட்டாள். இது ஒன்றே போதுமே படம் அவள் எழுதியது தான் என்பதை நிரூபிக்க! ஒருவேளை முன்ஜாக்கிரதையாக விஜயா அந்த

பென்சில் ஸ்கெட்சை அழித்திருந்தால்?

எதற்கும் முயன்று பார்ப்போமே என்ற எண்ணத்தில் படத்தை முடித்துவிட்டு வைஷ்ணவுக்கு முன்னால் வந்தாள் சித்ரா. படத்தை முடித்து விட்டு விஜயாவும் வந்து அமர்ந்திருந்தாள்.

இருவர் வரைந்த ஓவியங்களையும் ஒப்பிட்டுப் பார்த்த வைஷ்ணவ், "சித்ராவின் ஓவியம் பரிசு பெற்ற ஓவியத்தின் மறு அச்சாக அப்படியே இருக்கு. ஆனால் விஜயாவின் படம் அந்த மாதிரி இல்லை. அதற்காக பரிசு பெற்ற படம் சித்ராவினுடையதுதான் என்பதை நிரூபிக்க இது போதாது" என்றார்.

"சார்" என்று பணிவாக எழுந்த சித்ரா, "பரிசு பெற்ற ஓவியம் நான் வரைந்ததது தான் என்பதை நிரூபிக்க, அதன் பின்னால் என்ன இருந்தது என்பதை எழுதி, உங்களிடம் தருகிறேன். படத்தை பிரேமிலிருந்து கழற்றிப் பின்னால் பாருங்கள். உண்மை புரியும்" என்றாள். ஒரு காகிதத்தில் "பாப்பாவும் காந்தியும் – பென்சில் ஸ்கெட்ச்" என்று எழுதி மடித்து வைஷ்ணவ்விடம் தந்தாள்.

"நல்ல யோசனை. விஜயா, நீயும் எழுதிக் கொடும்மா. பரிசு பெற்ற படம் நீ போட்டதுதான் என்றால், அதன் பின்னால் என்ன இருக்கிறது என்பது உனக்கே கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமே? அதை எழுதிக் கொடு. நீயும் கொடுத்த பிறகு உங்கள் எல்லோர் முன்னிலையிலும் படத்தை பிரேமில் இருந்து கழற்றிப் பின்னால் பார்க்கிறேன்" என்று விரட்டினார்.

விஜயாவின் முகம் பேயறைந்தது போல் பயத்தால் வெளுத்தது. உடல் நடுங்கியது. காகிதத்தை வாங்கி 'நேரு மாமா படம்' என்று குருட்டாம்போக்கில் எழுதி மடித்து வைஷ்ணவிடம் தந்தாள்.

இரண்டு கடிதங்களையும் வாங்கி வைத்துக் கொண்டு, பரிசு பெற்ற ஓவியத்தை பிரேமில் இருந்து கழற்றினார். திருப்பிப் பார்த்தார். காந்தி பாப்பாவைக் கொஞ்சும் படத்தின் பென்சில் ஸ்கெட்ச் அப்படியே இருந்தது!

விஜயாவின் தந்தைக்கு தலைகவிழ்ந்து விட்டது. விஜயா பயத்தால் விசும்பினாள்.

"உன் புத்திசாலித்தனத்துக்கு என் பாராட்டு சித்ரா. வழக்கில் நீ ஜெயித்து விட்டாய்! பரிசு பெற்ற ஓவியம் நீ வரைந்ததுதான். நடுவர்களுக்குத் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுக்கிறேன். என் பாராட்டுகள்" என்று மகிழ்ச்சி யுடன் கை கொடுத்தார் வைஷ்ணவ்.


"போலீசுக்கு புகார் தந்து பத்திரிகைக்கும் அறிவிப்புத் தருகிறேன்."

"சார், என்னை மன்னித்து விடுங்கள்" என்று அழுதாள் விஜயா.

"செய்த காரியம் பெரிய தப்புதான். பரிசு வாங்கும் ஆசையில் இப்படிப் பண்ணி விட்டாள். மன்னித்து விடுங்கள்" என்று வைஷ்ணவின் கைகளைப் பற்றிக் கொண்டார் விஜயாவின் தந்தை.

"வைஷ்ணவ் சார். பெரிய மனது பண்ணி மேல் நடவடிக்கை எதுவும் விஜயா மேல் எடுக்காதீர்கள்" என்று வேண்டினாள் சித்ரா.

"உன் பரந்த மனம் எங்கே? இவளுடைய மோசடித்தனம் எங்கே! உனக்காகத்தான் பேசாமலிருக்கேன்" என்றார் வைஷ்ணவ்.



"அது சாரைப் பாம்பு, நல்ல பாம்புன்னு சொல்றியே!"

"அது என்னைக் கடிக்காமல் விட்டதால் 'நல்ல பாம்பு'ன்னு சொல்றேன்!"

– சக்தி. சரவணன்



போட்டி முடிவு திருத்தப்பட்டது. குடியரசுத் தலைவரிடமிருந்து தங்கப் பதக்கத்தை வாங்க சித்ராவை அழைத்துக் கொண்டு பசுபதியும் மங்கையும் டெல்லி சென்றனர். பாரீசில் ஓவியப் பயிற்சி பெற திட்டம் வகுக்கப்பட்டு, விமான டிக்கெட்டும் வந்து விட்டது. 'பாரீசில் இருக்கும் போது நான் கவனித்துக் கொள்கிறேன். கவலைப்பட வேண்டாம்' என்று ஸ்டான்லியிடமிருந்து செய்தி வந்தது.

பள்ளியில் நடந்த பாராட்டு விழாவில் நேரம் போதவில்லை. எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு சித்ராவைப் புகழ்ந்து தள்ளினர். ஆசிரியர்கள், சிநேகிதிகளின் அன்பு மழையில் சித்ரா நனைந்து தவித்தான்!

“சித்ரா டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆகி கைநிறைய சம்பாதித்து வெளிநாடுகளுக்கெல்லாம் போய் பேரோடும், புகழோடும் வாழ வேண்டும் என்று நானும் என் மனைவியும் இலட்சியக் கனவு காண்கிறோம். அதனால் அவளுக்குள் இருக்கும் ஓவிய ஆர்வத்திற்கு ஊக்கமளித்து எங்கள் கனவைக் கனவாகவே இருக்கும்படி செய்து விடாதீர்கள் என்று கோடை விழாவுக்கு முன்தினம் இரவு என்னைக் கேட்டுக் கொண்டது நினைவுக்கு வருகிறதா மிஸ்டர் பசுபதி? இப்பொழுது கூறுங்கள்? சித்ரா பொறியாளராகவோ டாக்டராகவோ ஆகாமலேயே ஏன் பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காமலேயே டாக்டருக்கோ பொறியாளருக்கோ கூடக் கிடைக்காத புகழைப் பெற்று அயல்நாட்டுக்குப் பயணமாகிறாளே? ஈன்றெடுத்த பெற்றோருக்கும் படித்த பள்ளிக்கும் இந்த வயதில் இப்படி ஒரு பெருமையை ஈட்டித் தந்துள்ளவர்கள் இருக்கிறீர்களா?” என்று கேட்டார் பெரிய மேடம்.

“மேடம் அது நான் அறியாமல் சொன்னது. அது தவறு என்பதைத்தான் எல்லோருமாகச் சேர்ந்து உணர்த்தி விட்டீர்களே!” என்று சிரித்தார் பசுபதி. அந்தச் சிரிப்பில் வனிதா, தமிழரசி, பெரிய மேடம் எல்லோரும் சேர்ந்து கொண்டனர்.

(முற்றும்)



புத்திசாலி!

சூரபுரியை ஆண்ட தேவராஜன் தன் மகளை புத்திசாலியான ஒருவனுக்கு மணமுடிக்க ஆசைப்பட்டார்.

எல்லா ஊர்களுக்கும் அழைப்பு அனுப்பினார். தனது போட்டியில் தேர்வு பெறாதவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என அறிவித்தார்.

பல ராஜகுமாரர்கள் வந்து அரசர் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் சிறை சென்றார்கள்.

கரணபுரி ராஜகுமாரர்கள் மூன்று பேர் போட்டிக்காக வந்து சிறையில் மாட்டிக் கொண்டார்கள்.

எல்லோருக்கும் இளையவனான பத்மராஜன், தான் போட்டியில் வென்று அண்ணன்களை காப்பாற்றுவதாக சபதம் செய்து புறப்பட்டான்.

அரசசபையில் நுழைந்த பத்மராஜனை பார்த்து எல்லோரும் கேலி செய்து சிரித்தார்கள்.

''பெரிய பெரிய ராஜகுமாரர்கள் வந்தும் போட்டியில் வெல்ல முடியவில்லை. இவன் வயதிலும் சிறியவனாக காணப்படுகிறானே'' என்று பேசிக் கொண்டார்கள்.

ராஜா கம்பீரமாக சிம்மாசனத்தில் வந்து அமர்ந்தார். "என் கேள்விக்கு சரியான விடை தராவிடில் என்ன தண்டனை தெரியுமா?" எனக் கேட்டார்.

"தெரியும் அரசே! விதி அதுவானால் போட்டியில் ஜெயித்து ராஜகுமாரியை மணப்பேன். இல்லையேல் சிறைவாசம் தான். எதையும் ஏற்கத் தயார். ஆனால் ஒன்று; நான் வெற்றி பெற்றால் சிறையிலிருக்கும் அத்தனை பேரையும் விடுதலை செய்ய வேண்டும்'' என்று கேட்டான்.

"சரி, அப்படியே ஆகட்டும்'' என்றார் அரசர்.

அரசர் பட்டுத் துணி மூடிய தங்கத் தட்டு ஒன்றை கொண்டு வரச் செய்தார்.

பட்டுத் துணி மூடிய தங்கத் தட்டு வந்தது. மறைவாக துணிக்குள் கைவிட்டு மூடிய கையை வெளியே எடுத்தார். "என் கையில் என்ன இருக்கிறது?'' என்றார் அரசர்.

பத்மராஜன் திகைத்தான். அறிவான கேள்விகளைக் கேட்டால் பதில் சொல்லலாம். மூடிய கையைக் காட்டினால்? நன்றாக மாட்டிக் கொண்டோம் என்று வருந்தி எப்படியும் சிறைவாசம்தான் என எண்ணினான்.

''மாங்கல்யம் என் கையில் வரப் போவதில்லை உங்களிடம்தான் இருக்கும்'' என்று ராஜகுமாரியை மணக்கும் பாக்கியம் தனக்கில்லை என்று சொல்லாமல் சொன்னான்.

"சபாஷ்! என் முதல் போட்டியில் நீ ஜெயித்து விட்டாய். என் மகளை மணக்கப் போகிறவன் கட்டும் மாங்கல்யத்தையே தட்டில் வைத்து கொண்டு வரச் சொன்னேன். நீ சரியாக விடையளித்தாய். இன்னும் ஒரே ஒரு கேள்வி. காற்றைக் கையில் கொண்டு வர முடியுமா?'' என்று கேட்டார்.


சிறிது நேரம் திகைத்தான். வேர்த்துக் கொட்டியது. தன் வழிப்பயணத்திற்கு பையில் வைத்திருந்த விசிறியை எடுத்து விசிறிக் கொண்டான்.


அரசர் எழுந்து வந்து பத்மராஜனை மார்போடு அணைத்துக் கொண்டார்.


''விசிறியால் காற்றைக் கொண்டு வந்து என் இரண்டாவது போட்டியிலும் வென்று விட்டாய். உன் வேண்டுகோள்படி இளவரசர்களை விடுதலை செய்து விடுகிறேன்'' என்றார் அரசர்.


ராஜகுமாரி தேவிக்கும் பத்மராஜனுக்கும் இனிதே திருமணம் நடந்தது.


— ஜானகி குமார்


நானே ராஜா!
கதை : டி.என். பாலகிருஷ்ணன்
படம் : சசி
சத்யவனம் காட்டில் கீர்த்தி என்ற யானை வசித்து வந்தது.
கீர்த்திக்கு பலமும் கர்வமும் அதிகம். மற்ற விலங்குகளை துச்சமாக மதித்தது.
ஒருநாள் –
நம் காட்டிற்குத் தேர்தல் நடத்தி புதிய தலைவரை தேர்ந்தெடுக்கணும்.
கீர்த்தியின் தொல்லை தாங்க முடியவில்லை.
அங்கே என்ன கூட்டம்?
ஒன்றும் இல்லை!
நான் உயிரோடு இருக்கும் வரை நான்தான் ராஜா.
என்னை மீறி கூட்டம் போட்டதற்கு தண்டனையாக தினமும் ஐம்பது தேங்காய் பத்துக் கட்டு கரும்பு கொடுக்கணும்.
கீர்த்தியின் கட்டளையால் சிறிய விலங்குகள் சிரமப்பட்டன.


ஒருநாள் –
எங்கே ஓடி ஒளி யறே? இன்று உன் முறை தானே!
என்னால் முடியலை
கீர்த்தி முயலை கோபமாகத் தூக்கி எறிந்தது.
மறுநாள் மான் வருவதைப் பார்த்த கீர்த்தி –
ஏய் மானே! இது என்ன இப்படி ஒரு கொம்பு? என் தந்தம் எத்தனை அழகு. கொம்பை வெட்டிடு.
கீர்த்தி தண்ணீர் குடிக்கச் சென்றது.
கொர்ர்ர்ர்க்.... தொர்ர்க்.... கோர்க்...
தவளைகளே இது என்ன சந்தைக் கடையா? சத்தம் போடாமல் இருக்கணும். புரியுதா?
எப்படி இருப்பது?
கீர்த்தியின் அட்டகாசத்தைத் தாங்க முடியாத விலங்குகள் மீண்டும் கூடின.
கீர்த்தியை யாராவது அடக்கணும்.
யாருக்கு தைரியம் இருக்கு?


எப்படி முடியும்?
என்னால் முடியும்.
என்ன சுட்டெறும்பே கிண்டலா?
உண்மைதான். அடக்கிக் காட்டறேன்.
அப்போது –
என்ன? மறுபடியும் தேர்தல் கூட்டமா?
மற்ற விலங்குகள் பயந்து ஓட ஆரம்பித்தன.
நில்லுங்கள். கீர்த்தி ராஜா இனிமேல் நான் தான் காட்டிற்குத் தலைவன்.
என்னிடம் எதிர்த்துப் பேச உனக்கு எவ்வளவு தைரியம்?
இனி நான் சொல்வதைத்தான் தாங்கள் செய்யணும்.
அற்ப எறும்பே உன்னை என்ன செய்கிறேன் பார்!


உங்களால் என்னை ஒன்றும் செய்ய இயலாது.
அதையும் பார்க்கலாம்.
எறும்பு கீர்த்தியின் மேல் ஏறி காதுக்குள் நுழைந்தது.
ஐயோ! நான் செத்தேன். காது வலி தாங்க முடிய லையே!
கீர்த்தி கீழே விழுந்து கண்ணீர் விட்டது.
எறும்பே! பாவம் கீர்த்தி ராஜா. வெளியில் வா.
நான் செய்தது தப்புதான். என்னை விட்டு விடு.
எறும்பு வெளியில் வந்தது.
அடுத்த தேர்தல் வரும்வரை நீதான் தலைவர்.



ஊறுகாய் ராணி!

எலுமிச்சை மரமும், நெல்லிக்காய் மரமும் பேசிக் கொண்டிருந்தன. திடீரென்று நான்தான் பெரியவள். நீ இல்லை நான்தான் பெரியவள் என்று வாக்குவாதம் வந்து சண்டையில் முடிந்தது. அப்பொழுது மாங்காய் மரம், "சண்டை போடாதீர்கள். நம் மூவரில் யார் பெரியவள் என்று நமக்கு நீர் பாய்ச்சும் தோட்டக்காரி மரகதத்திடமே கேட்கலாம்" என்றது.

சாயங்காலம், மூன்று மரங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தோட்டக்காரி மரகதமும் வந்தாள். அவளிடம் எலுமிச்சை மரம், "எங்கள் மூவரில் யார் பெரியவள் என்று கூறு" என்றது.

அதற்கு மிகவும் யோசித்தபடி மரகதம், "இது மிகவும் கடினமான கேள்வி. நீங்கள் மூவரும் அவரவர் பயன்களைக் கூறுங்கள். பிறகு நான் ஒரு மரத்திற்கு ஊறுகாய் ராணி என்ற பட்டத்தை அளிக்கிறேன்" என்றாள்.

முதலில் எலுமிச்சை, "என்னை எல்லோருக்கும் மிகவும் பிடிக்கும். என்னைப் பிழிந்து நீர் கலந்து குடிப்பார்கள். ஊறுகாய் செய்தும் சுவைப்பார்கள். அதனால் நானே ஊறுகாய் ராணி" என்றது.

அடுத்து நெல்லிக்காய் ஆரம்பித்தது, "என்னை சிறுவர் முதல் எல்லோருக்கும் பிடிக்கும். என்னை பச்சையாகவே சாப்பிடுவார்கள். என்னைத் தின்பவர்களுக்கு வரும் கண் சம்பந்தப்பட்ட நோயை முடிந்தவரை எதிர்ப்பேன். ஏனென்றால் என்னில் வைட்டமின் 'சி' இருக்கிறது. என்னை ஊறுகாயாகவும் சாப்பிடுவார்கள். எனவே நான்தான் ஊறுகாய் ராணி" என்று முடித்தது.

கடைசியாக மாங்காய் மரம் சொன்னது. "நானே என்னைப் பற்றிக் கூறினால் அது தற்பெருமை போல் ஆகிவிடும். என்னோட பயனைப் பற்றி உங்களுக்கே தெரியும்" என்று கூறியது.

மரகதம் சற்று நேரம் யோசித்த பிறகு, "நீங்கள் மூவரும் நிறைந்த பயனைக் கொடுக்கிறீர்கள். எனினும் மாங்காயே ஊறுகாய் ராணி. ஏனென்றால் அது சிறியதாக இருக்கும் போது மாவடுவாகவும் கொஞ்சம் பெரிதான பிறகு ஆவக்காயாகவும் நன்கு பழுத்த பிறகு மாம்பழமாகவும் பயன்படுகிறது. அதன் இலை கூட மாவிலை தோரணமாக வீட்டு வாசலில் கட்டப்படுகிறது. எனவே மாங்காயே ஊறுகாய் ராணி" என்றாள் மரகதம்.

உடனே நெல்லிக்காயும், எலுமிச்சையும் மரகதத்தின் தீர்ப்பை ஒப்புக்கொண்டு இனிமேல் சண்டை போட மாட்டோம் என்று சத்தியமும் செய்து கொடுத்தன.

— பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி,
தி. நகர், சென்னை - 17.

மந்திர வார்த்தை!

சந்திரன் சகலகலா வல்லவன். எந்த வேலையையும் நேர்த்தியாகச் செய்து முடிப்பான். திறமைகள் நிறைய இருந்த அவனிடம் அதே அளவு சோம்பலும் இருந்தது. அவனுக்கு எப்படியோ அரண்மனையில் காவல் பணி கிடைத்தது.

அவன் தனக்கு உரிய காவல் பணியை மட்டும் செய்வான். கூடுதலாக ஒரு துரும்பைக் கூட நகர்த்த மாட்டான்.

சந்திரன் உடன் பணியாற்றுபவர்கள், உயர் அதிகாரிகள் இடும் எந்த வேலையையும் எந்த நேரத்திலும் செய்து வந்தனர். சந்திரன் மட்டும் எந்த வேலையும் செய்யாமல் இருப்பது அவர்களுக்கு ஆச்சரியமாகவும், பொறாமையாகவும் இருந்தது.

ஒருநாள் அனைவரும் சந்திரனைப் பிடித்துக் கொண்டார்கள். "தலைவரிடம் கொடுக்கச் சொல்லி ஓலை கொடுத்து அனுப்புகிறார்கள்" என்று அங்கலாய்த்தான் ஒருவன். "என்னை அரசருக்கு தேவைப்படும் மூலிகைகளை மலையிலிருந்து பறித்து வரச் சொல்லியிருக்கிறார்கள்" என்று புலம்பினான் மற்றவன்.

"நீ மட்டும் எப்படி எந்தக் கூடுதல் வேலையும் செய்யாமல் தப்பித்துக் கொள்கிறாய்?" என்று சந்திரனிடம் அனைவரும் ஆவலோடு கேட்டனர்.

"என்னிடம் ஒரு மந்திர வார்த்தை இருக்கிறது. அதைச் சொன்னால் யாரும் எந்த வேலையும் சொல்ல மாட்டார்கள்" என்றான் சந்திரன்.

"எங்களுக்கும் அதைச் சொல்லிக் கொடு" - கெஞ்சினார்கள் அனைவரும்.

"எனக்குத் தெரியாது" என்றான் சந்திரன்.

"இப்பொழுதுதானே மந்திர வார்த்தை தெரியும் என்று சொன்னாய் அதற்குள் மறைக்கிறாயே" என்றான் ஒருவன்.

"அட முட்டாள்களே! 'எனக்குத் தெரியாது' என்பதுதான் அந்த மந்திர வார்த்தை. அடுத்த ஊருக்குப் போகும் பாதை சரியாகத் தெரியாது என்று சொல்லியிருந்தால், இவன் பாதை மாறி எங்காவது போய், உரிய நேரத்தில் ஓலையைக் கொண்டு போய் தலைவரிடம் சேர்க்க மாட்டான்' என்று ஓலை கொடுத்து அனுப்ப மாட்டார்கள்.

"எனக்குக் கரடுமுரடான மலைப் பாதையில் ஏறத் தெரியாது என்று சொல்லி விட்டால், 'இவன் மலையில் எங்காவது உருண்டு விழுந்து கையைக் காலை உடைத்துக் கொண்டு விடுவான்' என்று மூலிகை தேடி வரச் சொல்ல மாட்டார்கள்" என்ற சந்திரனின் விளக்கம் அவர்களுக்குப் புரிந்தது.

ஆனாலும் உயர் அதிகாரிகளிடம் பொய் சொல்லி தப்பிக்க அவர்களது மனச்சாட்சி இடம் தரவில்லை.

நாட்கள் ஓடின.

ஒருநாள் தலைமைக் காவலர் அனைத்துக் காவலர்களையும் அழைத்திருந்தார். காவலர்களின் கூட்டத்தில் சந்திரனும் இருந்தான்.

"உங்களில் யாருக்கு வடமொழி தெரியும்?" தலைமைக் காவலர் வினவினார்.

கிட்டத்தட்ட எண்பது பேர் இருந்தனர்.



கே. சுதர்ஷன்

ஆனாலும் மூன்று பேருக்கு மட்டுமே வட மொழி தெரிந்திருந்தது.

அவர்களது பெயரை தலைமைக் காவலர் குறித்துக் கொண்டார்.

சந்திரனுக்கு வடமொழி நன்கு தெரியும். அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

'வடமொழி தெரியும் என்று ஒப்புக் கொண்டால், அது சம்பந்தமாக ஏதாவது வேலை கொடுத்து விட்டால்...' அவனது குறுக்கு புத்தி இவ்வாறே கணக்கிட்டது.

அடுத்த வாரம்.

வடமொழி தெரிந்த காவலர்களை அரசர் அழைப்பதாகச் செய்தி வந்தது.

"வசமாக மாட்டிக் கொண்டார்கள்" என்று குதூகலித்தான் சந்திரன்.

அரசரை சந்தித்து விட்டு திரும்பி வந்தவர்கள் முகத்தில் ஏக சந்தோஷம்.

எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டு விசாரித்தனர்.

"நமது இளவரசியை வடநாட்டு அரசருக்குத் திருமணம் செய்து கொடுக்கப் போவது உங்கள் அனைவருக்கும் தெரியுமே. இளவரசியார் புது இடத்தில் தனியாக இருந்தால் மனம் வருத்தப்படுமே என்று அரசர் வடமொழி தெரிந்த காவலர்களை குடும்பத்துடன் இளவரசியாரோடு அனுப்பி வைக்கப் போகிறார்.

"இளவரசியாருக்கு அந்த இடம் நன்கு பழகியதும் காவலர்களை திரும்ப அழைத்துக் கொள்வாராம். அங்கு பணியாற்றும் காலம் வரை காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஐநூறு பொற்காசுகளை நம் அரசரே சம்பளமாகக் கொடுப்பாராம்" என்று சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டான் சந்திரன்.

வெறும் ஐம்பது பொற்காசுகளுக்காக காவல் பணி செய்யும் சந்திரன், அதிக ஊதியத்தையும், வடநாட்டைச் சுற்றிப் பார்க்கும் வசதியையும், இளவரசியாரோடு பயணம் செய்யும் வாய்ப்பையும் தனது மந்திர வார்த்தையால் இழந்து விட்டான்.



● CRACKERS - should be boycotted?

● Short Story Contest

● THE CHEAT - *Picture Story*

● Laboratory Experience - a game

SACHIN - Poster



GOKULAM

The monthly magazine for children

October '98 **Rs. 6/- only**

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097



காணவில்லை!

மணி திருட்டுத் தொழிலையே நம்பி வாழ்ந்தான். அவன் மனைவி எவ்வளவு சொல்லியும் அவன் திருந்தவில்லை. அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் சோமு. அவனுக்கு ஐந்து வயதாகிறது. சோமு தன் மாமா வீட்டில் படித்து வந்தான். இதனால் தன் தந்தை திருடன் என அவனுக்குத் தெரியாது.

மணியைத் திருத்த அவன் மனைவி ஒரு நாடகம் நடத்தலானாள். மணி ஒரு நாள் திருடி விட்டு வீட்டிற்கு வந்தான். அவன் மனைவி திடீரென்று ''நம் மகனை யாரோ கடத்திட்டு போயிட்டாங்களாம்.; அவன் மாமா இன்று கடிதம் போட்டார்'' என்றாள். இதைக் கேட்ட மணி அதிர்ச்சியாகி விட்டான்.

உடனே சோமுவின் மாமா வீட்டிற்குச் சென்றான். சோமுவின் மாமா, ''பள்ளியை விட்டுத் திரும்பிய சோமுவை யாரோ கடத்தி விட்டார்கள்'' என்று கூறினார்.

மணி வீட்டிற்குத் திரும்பினான். அவன் மனைவி, ''நீங்கள் திருட்டுத் தொழிலை விட்டு நம் பிள்ளையைத் தேடுங்கள். நீங்கள் வீட்டிற்கு வந்தால் கதவை மூன்று முறை தட்ட வேண்டும்'' என்றாள்.

சரியென்று மணி வெளியேறினான். மணி சென்றவுடன் வீட்டிற்குள் இருந்த நெற்குதிரிலிருந்து சோமுவை வெளியே வரச் சொன்னாள். ''உன் ஜாதகப்படி நீ தந்தையை ஒரு மாதம் பார்க்கக் கூடாது'' என்று மகனைச் சமதானப் படுத்தினாள்.

மணி மூன்று முறை கதவைத் தட்டினால் அவன் மனைவி சோமுவை நெற்குதிரில் மறைத்து விடுவாள்.

மிகவும் கவலைப்பட்டான் மணி. அவன் மனைவி , ''நீங்கள் திருட்டுத் தொழிலை விட்டு விட்டால் நம் பாவங்கள் நீங்கி நம் மகன் கிடைத்து விடுவான்'' என்றாள்.

மணியும் ''நான் இனி சத்தியமாகத் திருட மாட்டேன்'' என்றான். மறைந்திருந்த சோமு தன் தந்தையை அணைத்துக் கொண்டான். மகன் கிடைத்த சந்தோஷத்தில் திருடுவதை அன்றிலிருந்து மறந்து விட்டான் மணி.

ஆர். ராமு, பத்தாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
வென்னையாம்பட்டு.



என்ன தெரிந்து கொண்டாய்?

அறிவியல் பாடவேளை. ஆசிரியர்




தாமஸ் ஆல்வா எடிசனைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மாணவனை எழுப்பி "எடிசன் படிப்படியா மேலே வந்தார்ங்கிறதுல இருந்து என்ன தெரிஞ்சுக் கிட்டே?" என்று கேட்டார். சிறிது யோசித்த பின் "சார் அவர் காலத்தில் லிப்ட் இல்லேன்னு தெரிஞ்சுக் கிட்டேன்" என்று அவன் சொல்ல ஆசிரியர் உட்பட வகுப்பே சிரித்தது.

– ம. அமர்நாத்,
ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி, வத்தலக்குண்டு.

நின்று விட்டது!

புவியியல் வகுப்பு. ஆசிரியர் ஒவ்வொருவராய் எழுந்து ஒரு பத்தி படிக்கச் சொன்னார். வரிசையாகப் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவியின் முறை வந்தது. எழுந்து கடகட வென படிக்க ஆரம்பித்தாள். திடீரென்று ஒரு இடத்தில் அப்படியே படிக்காமல் நின்று விட்டாள். "ஏம்மா நிறுத்தினே?" என்றார் ஆசிரியர். ஒரு குறும்புக்கார மாணவன் இடையில் புகுந்து "சார், வண்டி வேகத் தடை வந்ததால் நின்று




விட்டது" என்றானே பார்க்கலாம்!

– இரா. பாலமுருகன்,
ஆதம்பாக்கம், சென்னை

இது என்ன?

உணவு இடைவேளை மணியடித்தும் அறிவியல் ஆசிரியர் தாவர செல்லின் படம் வரைந்து பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.



கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவன் டிபன் பாக்ஸில் இருந்த இட்லியை விழுங்கிக் கொண்டிருந்தான். சட்டென அவனை கவனித்த ஆசிரியர், தாவர செல்லின் படத்தைக் காட்டி "இது என்ன?" என்றார். அவனோ திருதிருவென விழித்த படி "இட்லி சார்" என்றான். எங்களுக்கு ஒரே சிரிப்பு. ஆசிரியர் மிகக் கோபமடைவதைப்

வேகத்தடையால் வண்டி நின்றது!


பார்த்த அவனோ "காலையில் சாப்பிடாமல் வந்தேன், மன்னித்து விடுங்கள் சார்!" என்றான்.

– எம். மகேஷ்,
தாரமங்கலம்.

எங்கள் பள்ளியில் நடந்தது!

குறள் சொல்!

எங்கள் வகுப்பில் குறும்புக்கார மாணவன் ஒருவன் திருக்குறளை தன் சொந்த நடையில் மாற்றிப் போட்டு சொல்லிக் கொண்டிருப்பான். ஒருநாள் தமிழாசிரியர் திடீரென்று அவனை எழுப்பி ஒரு குறளை




சொல்லச் சொன்னார்.. அவன் எழுந்து "அகர முதல எழுத்தெல்லாம் தகர பலகையில் எழுது" என்றான். மாணவர்கள் சிரித்தவுடன் தன் தவறை உணர்ந்து மீண்டும் சரியாகச் சொன்னான்.

– எம். ராஜதுரை, வரிக்கல்,
செஞ்சி தாலுகா.

விஞ்ஞானியின் பெயர் என்ன?

அறிவியல் ஆசிரியர் "உங்களுக்குத் தெரிந்த விஞ்ஞானியின் பெயரை ஒவ்வொருவரும் சொல்லுங்கள்" என்றார். அடுத்த வகுப்பிற்கான வீட்டுக் கணக்கை ஆசிரியருக்குத் தெரியாமல் போட்டுக் கொண்டிருந்தான் ஒருவன். அவன் முறை வந்தது. "என்ன சார்?" என்று கேட்டான். "பெயரைச் சொல்லிவிட்டு உட்கார்" என்றார் ஆசிரியர். "அழகப்பன்" என்றான். ஆசிரியருக்குக் கோபம் வந்தது. "உன் பெயரைக் கேட்கலே. 'நீ பத்து விஞ்ஞானிகளின் பெயரைச் சொல்லிவிட்டு




உட்காரலாம்" என்றார்.

– கே.எஸ். சுவாமி,
புதுப்பேட்டை.

தாமதம் ஏன்?

ஆசிரியர் பாடம் நடத்த ஆரம்பித்தார். ஒரு மாணவன் தாமதமாக வந்து சேர்ந்தான். "ஏண்டா லேட்?" என்றார் ஆசிரியர். "வேகமாக ஓடி வந்ததால் காரணத்தை ஜோடிக்க முடியலை சார்" என்றான் அவன். "அப்ப ஒரு காரணமும் இல்லாமல் லேட்டா வந்திருக்கே! இன்னிக்கு பள்ளி முடிந்ததும் நீ மட்டும் பத்து நிமிஷம் வகுப்பில் உட்கார்ந்து படித்து விட்டுப் போகணும்" என்றார் ஆசிரியர். அவனும் சரியென தலையாட்டியபடி வகுப்பில் அமர்ந்தான்.

– முகமது பாஷா,
அரசினர் ஆண்கள்
மேல்நிலைப்பள்ளி,
வத்தலக்குண்டு



தர்மபுரத்தில் மோகன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அப்பா கிடையாது. அம்மா மட்டுமே. மோகனுக்கு மிகுந்த கடவுள் நம்பிக்கை இருந்தது. பொதுவாகவே, தர்மபுரத்தில் மிகுந்த தண்ணீர் பஞ்சம். அதுவும் அந்த வருடம் பருவமழை கூடப் பொழியவில்லை. எனவே ஊர் மக்கள் ஒன்றுகூடி அரசரிடம் தங்கள் தண்ணீர் பஞ்சத்தைத் தீர்க்கும்படி முறையிட்டனர். அரசர் அண்டை நாடுகளிலெல்லாம் உதவி கேட்டுப் பார்த்தார். ஆனால் எல்லா நாடுகளிலுமே தண்ணீர் பஞ்சம் நிலவியது. எனவே எந்த நாட்டு அரசனும் உதவ முன் வரவில்லை.

அரசருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அமைச்சருக்கு ஓர் யோசனை தோன்றியது. அதன்படி நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுகூடி யாகம் செய்ய வேண்டுமென முடிவாயிற்று. மன்னரின் ஆணைப்படி ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஓர் ஆண் வர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதன்படி ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு ஆண் சென்றான்.

மோகன் வீட்டிற்கு அரசு காவலர்கள் வந்தபோது, மோகனின் அம்மா, "ஐயா, என் கணவர் போரில் இறந்து விட்டார். என் வீட்டில் இருக்கும் ஒரே ஆண் என் மகன்தான். அவனுக்கு இப்பொழுதுதான் பத்து வயதாகிறது. அவனை எப்படி நான் யாகம் செய்ய அனுப்புவது?" என்று வினவினார்.



நம்பிக்கை

ஆனால் காவலர்களோ "அரசர் ஆணையைக் கடைப்பிடிக்காவிட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும்" என்று எச்சரித்தனர். இதைக் கண்ட மோகன், "அம்மா! நீங்கள் கவலைப் படாதீர்கள்! நான் காட்டுக்குச் சென்று மற்றவர்களுடன் யாகம் செய்து விட்டு வருகிறேன்" என்று கூறினான்.

யாகம் செய்ய வேண்டிய நாளும் வந்தது. காலை பத்து மணிக்குள் அனைவரும் காட்டில் கூடியிருக்க வேண்டும் என்பது அரசனின் உத்தரவு. அனைவரும் காலை ஆறு மணிக்கே ஊரை விட்டு புறப்பட்டுச் சென்றனர். ஆனால் சிறுவனான மோகனோ, காலை ஆறரை மணிக்குத்தான் கண் விழித்தான். எழுந்து, குளித்துவிட்டு, சாப்பிட்டு அவன் வீட்டை விட்டுக் கிளம்பும்பொழுது மணி எட்டரை. அவன் ஊரை விட்டு பாதி தூரம் சென்ற பிறகுதான், தான் குடையை மறந்து வீட்டிலேயே வைத்து விட்டது நினைவிற்கு வந்தது.

உடனே அவன் ஓட்டமும் நடையுமாக



வீட்டையடைந்து குடையை எடுத்துக் கொண்டு காட்டில் அந்தக் குறிப்பிட்ட இடத்தை அடைய மணி பத்தே முக்காலாகி விட்டது. அனைவரும் பாதி யாகத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

அவன் தாமதமாக வந்ததற்காக ஊர் மக்கள் அவனைக் கடிந்து கொண்டனர். மேலும் அவன் தாமதமாக வந்ததற்கான காரணத்தைக் கேட்டனர். அதற்கு அவன் தான் குடையை எடுத்து வர மறந்து விட்டதால் மறுபடியும் வீட்டிற்குச் சென்று குடையை எடுத்து வந்ததைக் கூறினான். அதைக் கேட்டு அங்கு கூடியிருந்த அனைவரும் சிரித்தனர்.

அங்கு கூடியிருந்த எவரும் குடையை எடுத்து வரவில்லை. இவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என புரியாமல் விழித்தான் அந்தச் சிறுவன். அப்பொழுது ஒருவர், "ஏன் தம்பி! இப்பொழுதுதான் யாகமே செய்கிறோம். அதற்குள் குடையை எடுத்து வந்து விட்டாயே?" எனக் கூறி ஏளனம் செய்தார்.

அடுத்த நிமிடம் சடசடவென மழை பெய்யத் தொடங்கியது. உடனே ஒரு ஒலி விண்ணிலிருந்து கேட்டது. "அந்தச் சிறுவன் என் மீது வைத்திருந்த நம்பிக்கையில் நான்கில் ஒரு பங்கு கூட நீங்கள் என் மீது வைக்கவில்லை. என்னை நம்பியவர்களை நான் என்றும் கைவிட்டதில்லை" என்றது அந்த ஒலி.

அந்தச் சிறுவனின் நம்பிக்கையைக் கண்டு அனைவரும் வியந்தனர். அதே சமயம் தங்கள் தவறை உணர்ந்து வெட்கப்பட்டனர்.

- ஸ்ரீராம்,
எட்டாம் வகுப்பு, கூடுவாஞ்சேரி.

சுதந்தரச் சிலை!

நம் நாட்டில் சிலைகளுக்குப் பஞ்சம் கிடையாது. வீதிக்கு ஒரு சிலை இருக்கிறது. அவை பெரும்பாலும் அரசியல் தலைவர்களின் சிலைகளாகத்தான் இருக்கும். ஆனால் அமெரிக்காவில் ஒரு சிலை உள்ளது. அது எந்த ஓர் அரசியல் தலைவரின் சிலையும் அல்ல. மிகவும் புகழ் பெற்ற அந்த பிரம்மாண்ட சிலைக்கு வயது 112 ஆண்டுகள்!

4 ஜூலை 1776, அமெரிக்கர்கள் சுதந்தரம் பெற்ற தினம். இதனுடைய நூற்றாண்டு விழாவையொட்டி பிரெஞ்சு மக்கள் அமெரிக்கர்களுக்கு அளித்த பரிசு தான், அந்தச் சிலை. அதுதான், நியூயார்க் துறைமுகத்தில், சுதந்தரத் தீவில் உள்ள 'சுதந்தர தேவி சிலை'.

இச் சிலையை வடிவமைத்தவர் பிரெஞ்சு சிற்பி ப்ரெட்ரிக் - அகஸ்டே பர்தோடி. இதற்கு பண உதவி செய்தவர்கள் பிரெஞ்சு மக்கள். இதற்கு ஆதாரமான இரும்பு அமைப்பை உருவாக்கித் தந்தவர் புகழ்பெற்ற அலெக்ஸாண்டர் - கஸ்தேவ் ஈபில். ஈபில் கோபுரத்தை உருவாக்கிய அதே ஈபில்தான்.

சுதந்தரத்தைப் பெண்ணாக உருவகித்து ஒரு பெண் தீபத்தை உயர்த்தியபடி நின்று கொண்டிருப்பது போல் வடிவமைக்கப் பட்டுள்ளது இச் சிலை. இடக்கையில், அமெரிக்காவின் சுதந்தர தினம் (ஜூலை 4, 1776) பொறிக்கப்பட்ட சுதந்தர அறிக்கையை அப் பெண் வைத்திருக்கிறாள். அவளுடைய கிரீடத்தில் உள்ள ஏழு கதிர்களும், ஏழு கண்டங்களிலும் சுதந்தரம் பரவி வருவதைக் குறிக்கின்றன. டெலக்ராய்ஸின் புகழ்பெற்ற ஓவியமான 'மக்களுக்கு வழிகாட்டும் சுதந்தரம்' தான் இச் சிலையை பர்தோடி உருவாக்கத் தூண்டியது. சிலையின் முகச்சாயல் பர்தோடியின் தாயின் முகச்சாயலை ஒத்திருப்பதாகக் கருதப்படுகிறது. சுதந்தர தேவியின் காலில் அடிமைச் சங்கிலி உடைக்கப்பட்டிருக்கிறது.



இந்தச் சிலை உலகில் உள்ள உயரமான சிலைகளில் புகழ்பெற்றது. சிலையின் உயரம் மட்டுமே 152 அடி 2 அங்குலம். பீடத்துடன் சேர்த்து தீபத்தின் உச்சி வரை சிலையின் உயரம் 306 அடி 8 அங்குலம். சிலையின் கை 16 அடி 5 அங்குலம் வரை நீள்கிறது. சுட்டு விரலின் நீளம் மட்டுமே 8 அங். கழுத்திலிருந்து நெற்றி வரை உள்ள தூரம் 28 அடி; வாயின் அகலம் 3 அடி; ஒரு காதிலிருந்து மற்றொரு காது வரை உள்ள இடைவெளி 10 அடி. இச்சிலையின் எடை 254

மெட்ரிக் டன்கள். சிலையின் உச்சியை அடைய சுழற் மாடியும், விட்டும் உள்ளன.

பாரீஸில் உருவாக்கப்பட்ட இச் சிலை ஜூலை 4, 1884 அன்று அமெரிக்கத் தூதுவரிடம் பரிசாக அளிக்கப்பட்டது. பின்னர் பகுதி பகுதியாக நியூயார்க்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு பெட்லோ தீவில் (இப்போது 'சுதந்தரத் தீவு') நிறுவப்பட்டது. இதற்கு, பீடம் அமெரிக்க மக்கள் செலவில் உருவாக்கப்பட்டது. இறுதியாக, அக்டோபர் 28, 1886 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் க்ரோவர் க்ளீவ்லேண்டால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. 1924 ஆம் ஆண்டு சிலையும், தீவும் தேசிய நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டன.

இரும்பு அமைப்பை ஆதாரமாகக் கொண்ட தாமிரத் தகடுகளால் உருவாக்கப்பட்டது இச் சிலை. 4 அடி உயரச் சிலையிலிருந்து சிலையின் இப்போதைய உயரம் வரை பல மாதிரிகளைத் தயாரித்து இச் சிலையை பர்தோடி உருவாக்கினார். பீடத்தை வடிவமைத்தவர் அமெரிக்க கட்டிடவியல் வல்லுநர் ரிச்சர்ட் மோரிஸ் ஹன்ட். 1983-இல் இருந்து 1986 ஆம் ஆண்டு வரை சிலையைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்றது. துருப்பிடித்த இரும்பு பாகங்கள் நீக்கப்பட்டு துருப்பிடிக்காத ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் நிறுவப்பட்டது. கண்ணாடி – உலோக தீபத்தின் இடத்தைத் தாமிரத் தீபம் பிடித்தது.

சிலையின் பீடத்தில் ஒரு அருங்காட்சியகம் உள்ளது. அமெரிக்காவிற்கு குடியேறியவர்களைப் பற்றிய வரலாற்று அருங்காட்சியகம் அது. ஆசியாவிலிருந்து வந்த அமெரிக்க இந்தியர்களிலிருந்து துவங்கி வட ஆப்பிரிக்கர்கள், அயர்லாந்தினர், இத்தாலியர்கள், யூதர்கள், நவீன காலத்தில் குடியேறுபவர்கள் வரை அனைவரைப் பற்றியும் வரலாற்று குறிப்பு இங்கு உள்ளது. ஒளி-ஒலி காட்சிகள், மாதிரிகள், புகைப்படங்கள், ஓவியங்கள், உடைகள் என அனைத்து ஆதாரங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன. 1972-ஆம் ஆண்டு இவ்வருங்காட்சியகம் திறக்கப்பட்டது.

புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞரான எம்மா லாரஸ்ஸின் புகழ்பெற்ற கவிதையான 'தி நியூ கலோஸஸ்' இதன் தூண்டுதலாலேயே எழுதப்பட்டது. இக் கவிதையை சிலையின் பீடத்தில், 1903 ஆம் ஆண்டு பொறித்தனர்.

சர்வதேச நட்புறவைக் குறிக்கும் வகையில் உருவான இச் சிலை, சுதந்தரத்துக்குச் சின்னமாக விளங்குகிறது. இது மட்டுமின்றி கலங்கரை விளக்காகவும், விமானங்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

— கோ. சதீஷ்குமார்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 பெ	ங்	கு	வி	ன்		வி	ள்	2 கே
ட்		க்		க		3 பு		ர
ரோ		4 தே		5 பா				ள
ல்	6 தோ		ரை			7 ம	ண	ம்
			8 த	ஞ்	சை			
கை	க்	9 ச			10 ப		ழை	11 பி
லி				கு		12 நா		ரா
ல்		13 ம		க்		க		ன்
14 ம	று	தி		15 கொ	ல	ம்	ப	ஸ்



பாறை போல யானையொன்று படுத்துக் கிடக்குது!

சைக்கிள், தொகுப்பாளர்கள்; பி. பி. ரவீந்திரன், சு. பாலகுருநாதன், அ. ஹேமாவதி பக். 64 ரூ. 25/- அறிவியல் வெளியீடு, 24, கெனால் சாலை, திருவான்மியூர், சென்னை – 600 041.

சைக்கிள் எப்படி இயங்குகிறது, அதன் உறுப்புகள்; அவை வேலை செய்யும் விதம், சைக்கிளைப் பற்றிய விடுகதைகள், பாடல்கள், சைக்கிளின் வரலாறு, அதன் ஒவ்வொரு பாகமும் எப்படி மாறுதலடைந்து இன்றைய தோற்றத்தைப் பெற்றது, சைக்கிளின் பயன்கள் போன்ற எல்லாச் செய்திகளும் இந்த நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நமது அன்றாட வாழ்வில் இணைபிரியாத அருமை நண்பன் சைக்கிளைப் பற்றி இத்தனை செய்திகளா என்று நாமே வியக்கும் அளவுக்குத் தொகுத்து அழகிய படங்களுடன் தரப்பட்டுள்ளது. நூலை உருவாக்க எடுத்துக் கொண்ட உழைப்பை நூலைப் பார்க்கும் போதே உணர முடிகிறது. பெருமை தரும் பயனுள்ள படைப்பு.

✡

சித்திரக் கதைகள் முதல் தொகுதி, வாண்டுமாமா, பக்கம் 161, விலை ரூ. 40/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளன் தெரு, சென்னை – 17.

சிறுவர்களுக்கான சித்திரக் கதைகள் தயாரிப்பதில் தனித் திறமை பெற்ற வாண்டுமாமாவின் மூன்று புகழ்பெற்ற சித்திரக் கதைகள் இதில் உள்ளன. அண்மையில் கோகுலத்தில் வெளிவந்த மரகதச் சிலையும், ரத்தினபுரி இரகசியமும் இதில் அடக்கம். புத்தகத்தைக் கையில் எடுத்தால் ஒரே மூச்சில் முடித்து விட்டுத்தான் அடுத்த வேலையைக் கவனிக்கலாம். அத்தனை விறுவிறுப்பு. ரமணியும் செல்லப்பனும் கோபனும் போட்டி போட்டுக் கொண்டு அற்புதமான ஓவியங்களைத் தந்திருக்கிறார்கள். படிப்போர்க்கு முழுமையான திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுவது உறுதி.

✡

பிஞ்சுநிலா, தளவை இளங்குமரன், பக்கம் 144. ரூ. 40/- கண்மணி பதிப்பகம், ஈ-2, அரசு அலுவலர் குடியிருப்பு, செங்கற்பட்டு – 603 001.

சந்தம், பொருள், மொழி எல்லாம் சிறுவர் பாடல்களில் எப்படியிருக்க வேண்டும் என்று யாராவது கேட்டால் இந்த நூலை வாங்கிக் கொடுத்து விடலாம். அத்தனையும் தேன் சொட்டும் பாடல்கள். உரக்கப் படிக்க ஆரம்பித்தால் தாங்களாகவே குழந்தைகளைத் தாளம் போட வைக்கும். வழக்கமான மரபுப் பொருள்களின்றி 'சூழலைக் காப்போம்' 'காற்று' போன்ற அறிவியல் தலைப்புகளிலும் பாடல்கள் உண்டு. பாடல்களில் கையாளப்பட்டுள்ள உவமைகளோ உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன.

'பாறை போல யானையொன்று
படுத்துக் கிடக்குது – மலைப்
பாம்பு போலத் தும்பிக்கையும்
பயத்தைக் கொடுக்குது'

'வெண்ணெய் வழுக்கி விழுவதுபோல்
விளங்கும் அருவிக் குற்றாலம்'

படங்களும் அச்சும் அமைப்பும் அயல்நாட்டுப் பதிப்போ என்று மயங்க வைக்கின்றன!

✡

அருணாசலப் பிரதேசம், மணிமேகலை ஆசிரியர் குழு, பக். 112, ரூ. 21/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை – 600 017.

இந்திய மாநிலங்களின் வரிசையில் அருணாசலப் பிரதேசத்தின் தகவல்கள் அடங்கிய நூலைத் தந்திருக்கிறார்கள். அருணாசலப் பிரதேசத்தின் வரலாறு, அது தோன்றியவிதம், நகரங்கள், ஆறுகள், மலைகள் மற்றும் இயற்கை வளங்கள், மக்கள், கல்வியறிவு, தொழில்கள் போன்ற எல்லாத் தகவல்களும் இதில் உள்ளன. அருமையான தகவல் நூல்.

— ரே.


முதலைகள்

ஆழி




முதலைகள், ஊர்வனவற்றில் தனி வரிசையைச் சேர்ந்தவை. வாயு மண்டலக் காற்றை மூக்குத் துளைகள் வழியாகச் சுவாசிக்கக் கூடியவை. ஊன் உண்ணும் விலங்கு.


முதலைகளில் 12 இனங்கள் இருக்கின்றன. அவற்றை 4 வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். முகம் சிறிதாக உள்ளது 'மக்கர்' என்னும் சதுப்பு முதலை. முகம் நீளமாக உள்ளது 'அலிகேட்டர்' என்னும் பெருமுதலை. முகம் நீளமாகவும் கொடூரமாகவும் இருப்பது 'காரியால்' முதலை. கழுத்து மெலிந்து நீண்டு இருப்பது 'கெய்மன்' முதலை.




மக்கர்



அலிகேட்டர்




காரியால்




கெய்மன்




ஆப்பிரிக்காவில், சாரிநதியில் உள்ள முதலைகளுக்கு வரிக் குதிரைகள் போல் உடலில் பட்டைப் பட்டையான கோடுகள் இருக்கின்றன.




முதலை சுமார் ஒரு டன் கூட எடை இருக்கும். சுமார் 7 மீட்டர் நீளம் வளரும்.




முதலைக்கு 68 பற்கள் உள்ளன. அதன் வாயில் எந்த உயிரினமாவது பிடிபட்டால் பிரித்து எடுக்க முடியாது. அதன் பற்கள் வரிசையான ஒழுங்கான அமைப்பில் இல்லை.




முதலை தன் இரையை மென்று அசைபோட்டுத் தின்பதில்லை. தன் இரை எளிதில் ஜீரணமாக வேண்டும் என்பதற்காக, அது கற்களையும் விழுங்குகிறது! முதலை விழுங்கும் கற்கள், வயிற்றினுள் இருக்கும் இரையை, மாவு அரைக்கும் கிரைண்டர் போல் செயல்பட்டு ஜீரணிக்கச் செய்கின்றன. இந்தக் கற்கள், சிறு கூழாங்கற்கள் முதல், 2½ கிலோ எடையுள்ள கற்கள் வரை இருக்கும். இப்படி சுமார் 10 கிலோ கற்கள் அதன் இரைப்பையில் இருக்கும். இந்தக் கற்கள் இரையோடு விழுங்கப் படுவதில்லை. தனியாகவே விழுங்கப்படுகின்றன. இந்தக் கற்கள், முதலையின் ஆயுள்வரை வயிற்றுக்குள்ளேயே இருக்கும். வயிற்றில் கற்கள் இருப்பதால், வயிறு கனமாகி, நீரில் தேவையான போது மிதக்கவும், மற்ற சமயங்களில் நீரினுள் மூழ்கிக் கிடக்கவும் முதலையால் முடிகிறது.




பிப்ரவரி, மார்ச் மாதங்களில், பெண் முதலை, புதர் மண்டிய பகுதிகளில் மண்ணைத் தோண்டி சுமார் 30 முப்பது முட்டைகள் இடும். பின்பு இலைகளைப் போட்டு மூடி 90 நாட்கள் வரை காவல் காக்கும். அந்தச் சமயத்தில், மனிதர்களோ மற்ற விலங்குகளோ அங்கே சென்றால் பயங்கரமாகத் தாக்கும்.




90 நாட்களுக்குள் சூரிய வெப்பத்தால் முட்டைகள் முதிர்ச்சி அடையும். முதலைக் குஞ்சின் மூக்கிலும் பல் உண்டு. அந்தப் பல்லால் ஓட்டை உடைத்துக் கொண்டு குஞ்சுகள் தலையை நீட்டும். முதலை முட்டையிடும்போது, சூரிய வெப்பம் அதிகமாக இருந்தால் பெண் குஞ்சுகள் அதிகம் பிறக்கும். வெப்பம் குறைவாக இருந்தால் ஆண் குஞ்சுகள் அதிகம் பிறக்கும்! குஞ்சுகள் கீச் கீச் என்று கத்தும். இந்தச் சத்தத்தைக் கேட்டு தாய்முதலை ஒவ்வொரு குஞ்சாக வாயில் கவ்விக் கொண்டு நீருக்கு வந்து குஞ்சுகளின் மேல் ஒட்டியிருக்கும் மணலைக் கரைத்துக் குஞ்களை நீரில் விட்டுவிடும்.




முதலைக் குஞ்சு சுமார் 25 செ.மீ. நீளம் இருக்கும். முதலைக் குஞ்சுகள் சிறு சிறு மீன்களைத் தின்னும். ஆனால், முதலைக் குஞ்களைப் பெரிய மீன்கள் தின்றுவிடும்! முதலைக் குஞ்சுகள் அத்தனையும் உயிரோடு இருப்பதில்லை.



முதலையின் விழிகளுக்கு இமைகள் கிடையாது. விழிகள் திறந்தே இருக்கும்! முதலை அதிக நேரம் தூங்கிக்கொண்டே இருக்கும். அதன் உடலில் உள்ள அதிகப்படியான உப்புச் சத்து கண்களிலிருந்து நீராக வடியும். இரையைக் கவ்வ வாயைத் திறக்கும்போது தான் இந்த உப்புநீர் வெளிவரும். இதுதான் 'முதலைக் கண்ணீர்'!




கங்கை நதியில் வாழும் முதலைகள், கரையில் எரிந்து கொண்டிருக்கும் பிணங்களை, நீரை வாயில் கொண்டுவந்து அணைத்து இழுத்துக்கொண்டுபோய் தின்னுகின்றன!




முதலையினால் மூச்சை அடக்கிக்கொண்டு நீருக்குள் 6 மணி நேரம்கூட இருக்க முடியும்! முதலையினால் தரையில் சுமார் 12 மீட்டர் தூரம்தான் ஓடிவரமுடியும். அதற்குமேல் ஓட முடியாது!

முதலை நிறையத் தின்றுவிட்டால் மூன்று நாட்களுக்கு இரை தேடாது. மற்ற பிராணிகளுக்கு இல்லாத சிறப்பு முதலைக்கு உண்டு. மற்ற பிராணிகளுக்கு, அவை விழுங்கிய இரையின் எலும்புகள் ஜீரணமாகாது. ஆனால் முதலை, எலும்புகளையும் ஜீரணித்துவிடும்!




எல்லா பிராணிகளுக்கும் குறிப்பிட்ட வயதுக்குள் அவற்றின் வளர்ச்சி நின்றுவிடும். ஆனால் இறக்கும் வரை வளர்ந்துகொண்டேயிருக்கும் பிராணி முதலைதான்! ஒரு முதலையின் வயதை எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்? அதன் மேல் தோலில் எத்தனை பெரிய புடைப்புகள் உள்ளனவோ அத்தனை ஆண்டுகள் அதன் வயது!





முதலையின் தோல் மிகவும் உறுதியானது. அந்தத் தோலைத் துப்பாக்கிக் குண்டுகூட துளைக்க முடியாது. முதலையின் அடி வயிற்றுப் பகுதி தோலில்தான் 'புல்லட் புரூப்' டிரஸ் தயாரிக்கப்படுகிறது!



இது வரை பிடிபட்ட முதலைகளில், உலகிலேயே மிக நீளமான முதலை பாங்காக்கில் ஒரு முதலைப் பண்ணையில் இருக்கிறது.
நீளம்: 6 மீட்டர்! எடை: 1142. 27 கிலோ!
பெயர்: யோய்.

அமெரிக்காவில், மனிதன், முதலையுடன் சண்டை போட்டுக் காட்சி நடத்தும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுகின்றன.



பாடும் பேனா!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி 1

இடம் : விளையாட்டு மைதானம்

(குமாரும் சத்யாவும் கால்பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். சத்யா பந்துடன் குமாரிடம் வருகிறான்)

சத்யா: டேய் குமார், மணி ஆறாயிட்டுது. விளையாடினது போதும்! வா வீட்டுக்குப் போவோம்!

குமார்: ம்! கிளம்பு போகலாம்!

சத்யா: டேய் என்னடா இது? கையிலே எதையோ வச்சுக்கிட்டு துடைச்சுப் பார்த்துக்கிட்டிருக்கே... காட்டு... பேனா மாதிரி இருக்கு! பார்க்கவே வித்தியாசமா, விசித்திரமா இருக்கு!

குமார்: ம்! பேனாவேதான். கீழே விழுந்து மண் பட்டிருக்கு! அதான் துடைச்சுக்கிட்டிருக்கேன்.

சத்யா: இதை எப்போ வாங்கினே? எங்கே வாங்கினே?

குமார்: ம்... வந்து.... இது எனக்குப் பரிசா கிடைச்சப் பேனா! போன வாரம் நடந்த ஒரு ஓவியப் போட்டியிலே பரிசா கிடைச்சது.

சத்யா: ஓவியப் போட்டியிலே பரிசா கிடைச்சதா? எங்கிட்டே சொல்லவேயில்லை... இப்ப என்ன செய்தே? பேனாவிலேயிருந்து இனிமையான பியானோ இசை வருதே?

குமார்: ஆமாம். இதோ இந்தப் பட்டனை அமுக்கினேன்.

சத்யா: அப்போ அடுத்த பட்டனை அமுக்கினா?

குமார்: ம்!... வேற வாத்திய இசை வரும். இதோ அமுக்கறேன் கேளு!

சத்யா: குமார் நீ சொன்னபடி பாட்டு வரலே! பதிலா பேனாவோட நீளவாட்டத்திலே படிக்கும்படியா குட்டிப் பொன்மொழிதான் வந்திருக்கு! இப்படிக் காட்டு, படிக்கலாம்... எனது சுவர்க்கம் இந்திய மண்ணே! – விவேகானந்தர்... சரி, அடுத்த பட்டனை அமுக்கினாலும் பொன்மொழிதான் வருமா?

குமார்: ம்! பொன்மொழிதான்... இதோ அமுக்கறேன்.

சத்யா: மாண்டலின் இசை வருது! அடுத்தப் பட்டனை அமுக்கு!... அட, இப்ப வேற ஒரு பொன்மொழி தெரியறது. இது என்ன பொன்மொழி? 'பொய் கலவாத ஒழுக்கமே பலம்' – மகாத்மா! டேய் குமார்! அடுத்த மூணு பட்டன்களையும் வரிசையா அமுக்கு!... அட, எல்லாமே பல தேசியத் தலைவர்களோட பொன்மொழிகள்தான்! குமார் ஒரு சந்தேகம்'டா!

குமார்: என்னடா?

சத்யா: இந்தப் பேனா உனக்குப் பரிசா கிடைச்சு ஒரு வாரம் ஆச்சுங்கறே. ஆனா இதைப் பத்தி நீயே இன்னும் சரியா தெரிஞ்சுக்கல்லே... தப்புத் தப்பா சொல்றே?

குமார்: டேய், இது என் பேனா தான்டா! தெரியாத்தனமா 'பேண்ட்' பாக்கெட்லே போட்டுட்டு மறந்துட்டேன். இப்போ விளையாடினப்போ கீழே விழுந்திருக்கு. வா வீட்டுக்குப் போகலாம்!

சத்யா: "ம்! பிறர் பொருளை விரும்பாதே!"

குமார்: டேய் என்னடா சொல்றே?

சத்யா: குமார், இப்போ உன் பேனாவிலே வந்திருக்கிற பொன்மொழியைத் தான் உரக்கப் படிச்சேன். குரான் பொன்மொழி இது. இந்தா பேனா, பத்திரமா வச்சுக்க!

காட்சி 2

இடம்: குமார் வீடு

லதா: குமார் அண்ணா! என்ன இது, நீ எழுதிக்கிட்டே இருக்கிறப்போ பாட்டுச் சத்தம் கேட்கறது... அட பேனா! இந்தப் பேனாவா பாடிக்கிட்டிருக்கு!

குமார்: ஆமாம்! பேனாவேதான் பாடிக்கிட்டிருக்கு!

லதா: ரொம்ப அழகா அதிசயமா இருக்கே? அங்கங்கே தங்க நிறமும் சேர்ந்து பளிச்சின்னு மின்னறது.... இது ஏது குமார்?

குமார்: ம்...ம்... வந்து... இது ரெண்டு நாள் முன்னால பள்ளிக்கூட மைதானத்துலே கால்பந்து விளையாடிக்கிட்டு இருந்தபோது எனக்குக் கிடைச்சது. இங்கே வரிசையா இருக்கிற 'பட்டன்'களைத் தனித்தனியா அமுக்கினா பேனா பாட்டுப் பாடும்; பொன்மொழிகளும் சொல்லும்.

லதா: அடேயப்பா! இது ரொம்ப விலையுயர்ந்த பேனாவாகத்தான் இருக்கணும். ஆமாம், பள்ளிக்கூட மைதானத்துலே கிடைச்ச பேனாவை வீட்டுக்கு எடுத்துக்கிட்டு வந்துடறதா? உன் நண்பர்கள் யாராவது விளையாடறபோது கோட்டை விட்டிருப்பாங்க! நானாயிருந்தா எங்க பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர்கிட்டே ஒப்படைச்சிருப்பேன்.

குமார்: ம்!... நானும் எங்க பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர்கிட்டே சொன்னேனே... யார் பேனாவும் தொலைஞ்சதா தகவல் வரல்லே... நீயே வச்சுக்கோன்னு சொல்லிட்டார்!

காட்சி 3

இடம்: சத்யா வீடு

லதா: சத்யா... சத்யா!

சத்யா: வா லதா... என்ன வேணும்?

லதா: உன் நோட்டுப் புத்தகத்தை அண்ணன் கொடுத்துட்டு வரச் சொன்னான். இந்தா... நன்றி!


சத்யா: லதா, குமாருக்கு ஓவியப் போட்டியிலே அதிசயமான பேனா ஒண்ணு பரிசா கிடைச்சிருக்கு பார்த்தியா?

லதா: என்னது, ஓவியப் போட்டியிலே என் அண்ணனுக்குப் பரிசா? எப்போ? யார் சொன்னது?

சத்யா: ரெண்டு நாள் முன்னால பள்ளிக்கூட மைதானத்துலே கால்பந்து விளையாடிக்கிட்டிருந்தபோது குமாரேதான் சொன்னான்.

லதா: அப்படியா? பள்ளிக்கூட மைதானத்துலே கீழே விழுந்து கிடந்ததாத்தானே எங்கிட்டே சொன்னான்.

சத்யா: இல்லே பொய்!




அப்போ அந்தப் பேனா அவனோடதில்லை.... அதிசயமா இருக்கற பேனா மேல் ஆசைப்பட்டுத்தான் இப்படி நம்மை ஏமாத்தறான்.

லதா: சரி, எப்படியும் நான் உண்மையைக் கண்டு பிடிச்சுடறேன்.

"யானையை லாரியில எப்படி ஏத்து வாங்க?"

"கஷ்டப்பட்டுத் தான்!"

— பாளை பசும்பொன்



காட்சி 4

இடம்: குமார் வீடு

அப்பா: குமார், லதா... ரெண்டு பேரும் இப்படி வாங்க!

குமார், லதா: என்னப்பா?

அப்பா: ஒரு மகிழ்ச்சியான செய்தி! என் நண்பர், அதான் உன் பள்ளிக்கூட தலைமையாசிரியர் மோகன்தாஸ் வர வெள்ளிக்கிழமை நம்ம வீட்டுக்கு வரப் போறார்.

குமார்: ம்...ம்... எங்க பள்ளிக்கூட ஹெட்மாஸ்டரா? எதுக்குப்பா நம்ம வீட்டுக்கு வரார்?

லதா: வரட்டுமே குமார், நீ ஏன் பயந்தமாதிரி பேசறே?

அப்பா: போன மாசம் ஆசிரியர் தின விழா நடந்தபோது மோகன்தாஸுக்கு 'நல்லாசிரியர் விருது' கொடுத்திருக்காங்க இல்லே... அதனால நான் அவருக்கு நம்ம வீட்டுலே ஒரு விருந்து கொடுக்கப் போறேன். வெள்ளிக்கிழமை காந்தி பிறந்த நாள்... உங்களுக்கும் விடுமுறைதான்... அதனால அங்கே இங்கே போகாம வீட்டிலேயே இருங்க!

லதா: (தனக்குள்) இதுதான் நல்ல சமயம்! விருந்து முடிந்ததும் நானே தலைமையாசிரியர்கிட்டே பேனாவைப் பத்தி விவரம் கேக்கறேன்.

காட்சி 5

இடம்: குமார் வீடு

தலைமை ஆசிரியர்: மணிவேல்! விருந்து ரொம்பப் பிரமாதம்! நம்மோட பழைய நட்பை மறக்காம நீ கொடுத்த விருந்திற்கு எனது நன்றி.

அப்பா: மோகன்தாஸ்! நீ நல்லாசிரியர் மட்டுமில்லை, எனக்கு எப்பொழுதும் நல்ல நண்பனும் கூட!

த.ஆ: நல்லாசிரியர் விருது கிடைச்சது தெரிஞ்சதும் நீ என் வீட்டுக்கு வந்து பாராட்டினே... நட்புக்குப் பரிசா விலையுயர்ந்த அற்புதமான ஒரு பேனாவையும் கொடுத்தே!... பாட்டுப் பாடி பொன்மொழிகளையும் காட்டும் அந்தப் பேனாவைப் பாராட்டாதவங்க யாருமேயில்லை. அதைப்பத்தி சமீபத்திலே ஒரு கவிதைகூட எழுதினேன்.

லதா: அப்பா! நீங்க சாருக்கு அபூர்வப் பேனாவைப் பரிசா கொடுத்தீங்களா? எங்ககிட்டே சொல்லவே இல்லையே?... குமார் உனக்குத் தெரியுமா?

குமார்: ஹ்ஹூம்...ஹ்ஹூம்!


லதா: குமார், எங்கே போறே? இங்கேயே இரு! சார்! எனக்குக் கவிதைன்னா ரொம்பப் பிடிக்கும். நீங்க எனக்கு அந்தக் கவிதையை படித்துக் காட்டுங்க சார்!

த.ஆ: இதுதான்மா நான் எழுதின கவிதை:-

நல்லாசிரியர் விருதினை நான் பெற்ற நேரம்,
நண்பன் மணி வேலன் தந்தானொரு பேனா!
நல்லிசைகள் நடுவிலே நல்மொழிகள் பலவும்,
நல்முத்தாய் தெரிந்திட்ட நிகரற்ற பேனாவை,
நல்மரங்கள் நடுவிழா நாளிலிழந்தேனே!
நண்பா மணி வேலா நண்பனை மன்னிப்பாயா!

அப்பா: என்ன மோகன்தாஸ், பேனா தொலைஞ்சு போச்சா?

த.ஆ: ஆமாம்! போன வாரம் பள்ளிக்கூட



"காத்து வாங்கிட்டு வந்து கதை சொல்றேண்டா, ராஜேஷ்!"

"காத்து வாங்க நீதான் போக ணுமா...? வேலைக்காரனை விட்டு வாங் கிட்டு வரச் சொல்லிட்டு, எனக்குக் கதை சொல்லு தாத்தா....!"

— ஜூனியர் தேஜ்

விளையாட்டு மைதானத்துலே மரம் நடு விழா கொண்டாடினோம். அப்போ தான் அந்தப் பேனா தவறி மைதானத் துலே விழுந்திருக்கணும்! பேனா தொலைந்து போனது தெரிஞ்சதும் ரொம்ப வேதனைப் பட்டேன்... உடனே இந்தக் கவிதையையும் என் டயரியிலே எழுதிட்டேன்.

லதா: ஏய் குமார், ஏன் உன் கண்லே தண்ணி வருது?

அப்பா: ஏன் குமார், என்ன ஆச்சு?

லதா: குமார், காரணம் அதானே?

த.ஆ: என்னம்மா காரணம்?

லதா: சார், நீங்க நல்ல பேனாவை தொலைச்ச வேதனையிலே எழுதின கவிதை, குமார் மனசை உருக்கிட்டுது. அப்படித்தானே குமார்? இப்போ நீங்க, எங்கப்பா கையால் மறுபடியும் ஒரு பரிசு வாங்கிக்கிட்டுப் போகணும் சார்!

த.ஆ: பரிசு, விருந்து எல்லாம் ஒரு முறை போதும் லதா!

அப்பா: மோகன்தாஸ்! குழந்தைங்க விரும்பறாங்க, நீ மறுக்காதே!

லதா: ஆமாம் சார்! நீங்க அந்தக் கவிதையை மட்டும் இந்தப் பேப்பர்லே எழுதிக் கொடுத்துடுங்க. அப்பா, குமார், உள்ளே கொஞ்சம் வாங்க! (உள்ளே போனதும்) குமார், இப்போ என்ன சொல்றே? நீ வச்சிருக்கிற பேனா தலைமையாசிரியருக்கு அப்பா கொடுத்த அந்தப் பரிசுப் பேனாதானே?

குமார்: ஆமாம் லதா, அவரோட பேனாதான்! அப்பா! பள்ளி மைதா னத்திலே கிடைச்ச இந்தப் பேனாவை நானே வச்சுக்க ஆசைப்பட்டேன். அதுக்காக லதாகிட்டேயும் சத்யாகிட் டேயும் பொய் சொன்னேன். ஆனா, நீங்க ஆசிரியருக்கு அன்புப் பரிசா கொடுத்த அதிசயப் பேனாதான் இதுங்கறதை இப்ப தெரிஞ்சுக் கிட்டேன்... ஆசிரியர் சொன்ன கவிதை என் மனசை மாத்திட்டது.... தயவு செய்து இந்தப் பேனாவையே இன் னொரு பரிசா அவருக்குக் கொடுத் துடுங்கப்பா!

லதா: குமார், மத்தவங்க பொருள் எவ்வளவு அபூர்வமாயிருந்தாலும், அது மேல நாம ஆசை வைக்கக் கூடாது. புரிஞ்சுக்கிட்டியா?


லதா: இந்தாங்கப்பா அட்டைப் பெட்டி. இதுலே பேனாவைப் போட்டு 'பேக்' பண்ணிக் கொண்டு வாங்க. நான் ஆசிரியர்கிட்டே பேசிக்கிட்டிருக்கேன்... (வெளிய வந்து) அப்பா, ஆசிரியரைக் காணோம். கிளம்பிப் போயிட்டார்.!

குமார்: இதோ கவிதையை மட்டும் எழுதி வச்சுட்டுப் போயிருக்கார்! கூட ஏதோ குறிப்பும் எழுதியிருக்கார்பா!

அப்பா: ம்! படி பார்க்கலாம்!

குமார்: (படிக்கிறான்) நண்பர் மணி வேல்! விருந்திற்கு நன்றி! நீங்கள் உள்ளே பேசிக் கொண்டது என் காதில் விழுந்தது. பேனாவைத் தனதாக ஆக்கிக் கொள்ள ஆசைப்பட்ட குமார் இப் பொழுது தன் தகாத செயலுக்காக வருந்துவதும் தெரிகிறது. நான் அவனுக்களிக்கும் பரிசாக அப்பேனா இருக்கட்டும்!


குமார்: இனிமேலும் எங்கிட்டே பேனா இருந்தா தூக்கம் வராது. இப் பவே தலைமை ஆசிரியரைப் பார்த்துக் கொடுத்துட்டு வரேன்! ஆனா பரிசாக இல்லே... அவர் தொலைச்ச பேனாவை அவர்கிட்டேயே திருப்பித் தரப் போறேன்!.... (என்றபடி குமார் தலைமையாசிரியர் வீட்டுக்கு ஓடுகிறான்)



"ஆறுகளைப் பற்றிய கட்டுரைப் போட்டியில் உனக்கு என்ன பரிசு கிடைத்தது?"

"'ஆறு'தல் பரிசுதான் கிடைத்தது!"

— பாண்டமங்கலம், ஜி. குமரேசன்.



"சைக்கிளில் லைட் எரியலையே, ஏண்டா?"

"ஒருவேளை இந்த மாதம் கரண்ட் பில் கட்டலையோ, என்னவோ!"

— காவேரிப்பட்டணம்சோமசேகர்.

"புலவர் மன்னரை விட்டுட்டு மந்திரியைப் புகழ்ந்து பாடிக்கிட்டு இருக்காரே, ஏன்?"

"அவரிடம்தானே கஜானா பொறுப்பு இருக்கு!"

— இரா. அ. தென்றல் நிலவன், ராஜாக் கவுண்டம்பாளையம்.



"ஏதாவது ஜோக் சொன்னால் அவன் ஏன் உட்கார்ந்து, உட்கார்ந்து சிரிக்கிறான்?"

"விழுந்து, விழுந்து சிரிச்சா உடம்பில் காயம்படுமே!"

— சீர்காழி. ஜே. பலராமன்.





"ரேசன் கடையில் வேலை பார்க்கும் கந்தசாமிக்கு தொழில் மேல் நிறைய பக்தி!"

"எப்படி சொல்றே?"

"தன் மகன்களுக்கு சுந்த'ரேசன், கும'ரேசன்' என்று பெயர் வைத்திருக்கிறாரே!"

— ஆரூர் ராஜலெட்சுமி, திருவாரூர்.

ஹா, ஹா, ஹா! ஹா, ஹா, ஹா! ஹா, ஹா, ஹா!

ப்ரீத்தியும் நவீனும் அம்மாவைத் தேடி சமையலறைக்குள் நுழைந்தனர்.

"அம்மா எங்களுக்குப் பொழுது போகலை. உங்களுக்கு ஏதாவது உதவி செய்யட்டுமா?" என்று இருவரும் கேட்டனர்.

"ஐயோ! நீங்க எதுக்கு சமையலறைக்கு வந்தீங்க. போங்க! போய் ஹால்ல உட்காருங்க!" என்று அம்மா சற்று கண்டிப்புடன் கூறினார்.

"குழந்தைகள் சமையலறைக்குள் வந்தால் ஏன் இப்படி விரட்டறே?" என்று கேட்டபடி வந்தார் அப்பா.

"சமையலறைக்குள் வந்து என்ன செய்யப் போறாங்க? ஏதாவது தொந்தரவுதான் வரும்."

"இப்ப அவங்களுக்கு ஆர்வம் இருக்கும்போது சமையலறைப் பக்கமே விட மாட்டேங்கறே! அப்புறமா உதவி செய்யலேன்னு அலுத்துக்குவே!"

"இப்பவே சமையல் கற்று என்ன செய்யப் போறாங்க?"

"ஏன் செய்யக் கூடாது? முதலில் குழந்தைகளுக்கு சமையலறை, சமையல் என்பதை பயப்படும்படியான விஷயமாக உருவாக்கிடக் கூடாது."

"அப்புறம்?" என்று கேட்டார் அம்மா.

"எதுக்கு பயப்படணும்? நம்ம மேற்பார்வையிலே, பாதுகாப்பா உதவி செய்யச் சொல்றதும் கற்றுக் கொடுக்கிறதும் தப்பில்லை."

"இதையெல்லாம் தெரிந்து கொள்வதால் என்ன பயன்?"

"ஏன் இல்லை! வெறும் சாப்பிடற விஷயமாகப் பார்க்காமல் அதில் உள்ள விஞ்ஞானத்தை, அதிசயத்தை அறிந்து கொள்ளவோ அல்லது விவாதிக்கவோ கூட பயன்படுத்திக்கலாமே! ப்ரீத்தி, நவீன் நீங்க என்ன சொல்றீங்க?" என்று கேட்டார் அப்பா.

"அப்பா எங்களுக்கு இது சுவாரசியமான விஷயமாகத்தான் படுது. நாங்க ரெடி" என்றனர் இருவரும் ஒரே குரலில்.

"ப்ரீத்தியாவது பரவாயில்லை. நவீனுக்கு எதுக்கு இதெல்லாம்?" என்று அம்மா தனது அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"குழந்தைகளில் இருவரும் ஒன்றுதான். கல்யாணங்களில், ஹோட்டல்களில் எல்லாம் ஆண்கள் சமைப்பதில்லையா?"

"அப்பா நாங்க சமைக்க தயாராயிட்டோம். ஆரம்பிக்கலாமா?" என்றாள் ப்ரீத்தி.

"இருங்க! முதலில் இந்த மாதிரி உடை போட்டுட்டு அடுப்பு பக்கத்தில் போகக் கூடாது. பருத்தி ஆடைதான் உடுத்தணும்." என்றார் அப்பா.

"இதோ நொடியில் உடை மாற்றிட்டு வந்திடறேன்" என்று ஓடினாள் ப்ரீத்தி.

சில நிமிடங்களில் திரும்பியவள் "அம்மா சாதம் வைக்கப் போறீங்களா? நான் அரிசியைக் கழுவித் தரட்டுமா?" என்று கேட்டாள் ப்ரீத்தி.

"இல்லை. நான்தான் செய்வேன்" என்றான் நவீன்."

"நீ வேற வேலை செய் நவீன்" என்றார் அப்பா.

கழுவித் தந்த அரிசியை அம்மா குக்கரில் வைத்து அடுப்பில் ஏற்றினார்.

"ப்ரீத்தி, நவீன் உங்களுக்கு ஒரு கேள்வி?"

"என்ன, சொல்லுங்கப்பா?"

"எங்கிட்டே முதலில் கேளுங்க" என்றான் நவீன்.

"யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். அரிசி ஏன் வேகிறது?" என்று கேட்டார் அப்பா.

"வேகலைன்னா சாப்பிட முடியாதே!" என்றான் நவீன்.

"டேய் நவீன்! இது ஒரு பதிலா?' நான் சொல்றேன்! ம்.... அது ஒரு திடப் பொருள். அதனால்தான் வேகுது" என்றாள் ப்ரீத்தி.

"இல்லை. அப்ப கல், மரக்கட்டை கூட வேகணுமே! அம்மாகிட்டே கேட்டுப் பாருங்க!"

"எவ்வளவு நேரத்தில் வேகும்னு என்னால சொல்ல முடியும். எப்படி வேகும் என்றால் என்ன சொல்றது? தெரியலை!" என்றார் அம்மா வருத்தத்துடன்.

சிறுவர்கள்

"அரிசியில் உள்ள ஈரப்பதம்தான் காரணம். அரிசியை கொதிக்கும் நீரில் போடும்போது அதிலுள்ள ஈரப்பதம் வெப்பத்தால் வெளியேறுகிறது. இதனால்தான் சாதம் வடிக்கும்போது மாவுப் பொருள் தண்ணீரில் கரைந்து கஞ்சியாக மாறி விடுகிறது. அரிசிக்கு மட்டுமில்லை. கடுகு வெடிப்பதும், அப்பளம் பொரிவதும், சோளம் பொரியாவதும் இன்னும் இது போன்ற உணவுப் பொருட்கள் சாப்பிடும் பதத்தில் உருவாவதற்கு இந்த ஈரப்பதம்தான் காரணம்" என்றார் அப்பா.

"அம்மா பருப்பில் ஏன் எண்ணெய் ஊற்றி வேக வைக்கறீங்க?" என்றான் நவீன்.

"பருப்பில் எண்ணெய் ஊற்றினால் சீக்கிரம் வெந்து விடும்" என்றார் அம்மா.

"அதான் எப்படிங்கறேன்?" என்று மடக்கினாள் ப்ரீத்தி.



சமைக்கலாமா?

"பருப்பில் எண்ணெய் ஊற்றும்போது தண்ணீரின் மேற்பரப்பில் எண்ணெய் படர்ந்து விடுவதால் ஆவி வெளியேறுவது கட்டுப் படுத்தப்படுகிறது. இதனால் பருப்பு எளிதாக வெந்து விடுகிறது" என்றார் அப்பா.

"அப்பா! ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு அடிப்படை அறிவியல் உண்மை இருக்குதே!" என்றாள் ப்ரீத்தி.

"ஆமாம். இது மாதிரி சுவையான விஷயங்கள் சமையலில் ஏராளமாக உண்டு."

"இனி நேரம் கிடைக்கும்போது சமை யலறைக்குள் நுழைய தயங்க மாட்டோம்" என்றனர் ப்ரீத்தியும் நவீனும்.

"ஆனால் ஒரு முக்கியமான விஷயம். பெரியவங்க உதவி இல்லாமல் நீங்களாக ஏதாவது செய்யக் கூடாது" என்றார்கள் அம்மாவும் அப்பாவும்.

உங்கள் கவனத்திற்கு...

- சமையல் வேலைகளில் ஈடுபடும் போது தளர்வான உடைகளையோ, எளிதில் தீப்பற்றக் கூடிய பாலியெஸ்டர், நைலான் உடை களையோ அணிய வேண்டாம். பருத்தி ஆடைகளே சிறந்தவை.
- கொதி நீர், எண்ணெய் ஆகியவற்றைக் கையாள்வதில் அதிக கவனம் தேவை.
- சமையலறை ஜன்னல்களை சமைக் கும்போது திறந்து வையுங்கள்.
- பாத்திரங்களை அடுப்பிலிருந்து இறக்க இடுக்கியைப் பயன்படுத்துங்கள்.
- சமையல் முறைகளைக் கற்றுக் கொள் வதோடு, நீங்களும் சமையல் குறிப்புகளை உருவாக்குங்கள்.
- நீங்கள் உருவாக்கிய புதிய சமையல் குறிப்புகளை கோகுலத்திற்கு அனுப்பி வையுங்கள்.


அட்டையில் : **சிந்துஜா அம்மாவுடன்**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

காகிதத்தின் பிறப்பு!

நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? சுமாராக 55 சதம். 100க்கு 55 பேர்தான். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் காகிதத்தைத் தெரியும். ஆனால், அதன் வரலாறு எத்தனை பேருக்குத் தெரியும்?

முதன் முதலில் எழுத்தைப் பயன்படுத்தியவர்கள் சுமேரியர்கள்தான். அப்போது எழுதுவதற்கு இப்போது இருப்பதைப் போல மரக்கூழால் செய்த காகிதம் கிடையாது. அப்புறம் எதில் எழுதினார்கள் என்கிறீர்களா? பச்சைக் களி மண்ணால் செய்த பலகைகளில் உலர்ந்த களிமண்ணால் செய்த அச்சு எழுத்துகளைப் பதித்து எழுதினார்கள். இந்த அச்சு எழுத்துக்கள் △ போன்ற



முக்கோண வடிவில் இருக்கும். இந்த முக்கோண வடிவை பச்சைக் களிமண் பலகையில் மாற்றி, மாற்றி △▽△▽ இப்படி எழுதி அச்சடிப்பார்கள்! இந்த எழுத்துக்களுக்கு 'கியூனிபாம்' எழுத்துக்கள் என்று பெயர்.

அறிவியலிலும் நாகரிகத்திலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் கிரேக்கர்களே! கிரேக்க நாகரிகம் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் நைல் நதிக் கரையில் உருவானது. நைல் நதிக்கரையில் உயர்ந்த மெல்லிய பாப்பிரஸ் செடிகள் வளர்ந்திருந்தன.

கிரேக்கத்தில் பாப்பிரஸ் என்பதற்கு 'ஓலை நாணல்' என்று பொருள். பாப்பிரஸ் பட்டையை விரித்து, அதன் உட் பகுதியில்தான் கிரேக்கர்கள் எழுதினார்கள். பாப்பிரஸ்ஸின் உபயோகங்கள் மற்றும் அவை பற்றிய விளக்கங்கள் கிரேக்கர்களின் கல்லறைகளில் காணப்படுகின்றன. கி.மு. 3600 ஆம் ஆண்டுகளில் கிரேக்கர்கள் பாப்பிரஸ் பட்டையில் எழுதியதாக குறிப்பு காணப்படுகின்றது.

பாப்பிரஸ் தாவரம் பெரும்பாலும் நைல் நதிக் கரையில்தான் பயிரிடப் பட்டு வந்தது. அப்போது 'பாப்பிரஸ்' எழுத்துகள் உலகில் வேறெங்கும் இல்லாததால் இவை உலகப் பிரசித்தி பெற்றன. அதன் பின்னர் தான் மரக்கூழில் இருந்து பேப்பரைத் தயாரித்து எழுதப் பயன்படுத்தினர். இன்றும் கூட நைல் நதியின் மேற் பகுதியான எதியோபியா மற்றும் சிரியா போன்ற பகுதிகளில் தெற்கு ஐரோப்பாவில் உள்ளதைப் போல 'பாப்பிரஸ்' உள்ளது. நாம் இன்று பயன்படுத்தும் 'பேப்பர்' என்ற சொல் 'பாப்பிரஸ்' என்ற வார்த்தையிலிருந்து பிறந்தது தான். இதுவே, 'பாப்பிரஸ்', பேப்பராக மாறிய கதை.


பாப்பிரஸ் சதுப்பு நிலம் மற்றும் ஆற்றுப் படுகைகளில் சுமார் 5 மீட்டர் உயரத்தில் வளர்க்கப்படுகிறது. துவக்க காலத்தில் எழுதுவதற்காக பயன் படுத்தப்பட்ட பாப்பிரஸ் தாவரம் இப்போது அலங்காரத் தாவரமாக வீடுகளை அழகுபடுத்தப் பயன் படுத்தப்படுகிறது.

— மோகனா

ரேவதி

எழுதும்

மின்கலம் மாதவன்





• உங்களைப் போன்ற பள்ளி மாணவன் தான் அவன். ஆனால் முற்றிலும் மாறுபட்டவன்.

• மந்திரவாதி அல்ல. ஆனால் மந்திரவாதிகளையே திகைக்க வைப்பவன்.

• நிற்கும் ரயிலை ஓட வைக்கிறான். மின் சாதனங்கள் எல்லாம் அவனைக் கண்டு தடுமாறுகின்றன.

• அவன் பேயா, பிசாசா, மந்திரவாதியா, மகானா? கண்டுபிடிக்க இயலாது திணறுகிறார்கள் எல்லோரும்.

யார் அவன்? அவன்தான் மின்கலம் மாதவன்! விறுவிறுப்பான புதிய தொடர் கதை.

நவம்பர் இதழில் ஆரம்பமாகிறது. ஏமாற்றத்தைத் தவிர்க்க இப்பொழுதே உங்கள் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள்.

கோகுலம்

சந்தா செலுத்துங்கள்!

கோகுலம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பருக்கு பரிசளிக்க வேண்டுமா? அப்படியானால் சந்தா செலுத்தலாமே? ஒவ்வொரு மாதமும் உங்களைத் தேடி உங்கள் வீட்டுக்கே வரும் கோகுலம்!

இந்த சந்தாப் படிவத்தை பூர்த்தி செய்து உடனே அனுப்பி வையுங்கள்.

பெயர் : ....


முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



விடுகதை பக்கம்

1. காலைத் தழுவ ஓடி வருவான்; காரியம் மிஞ்சினால் வாரிச் சுருட்டிக் கொள்வான். அவன் யார்?

2. நோயின்றி, நொடியின்றி தினம் மெலிந்திடுவான். அவன் யார்?

3. மரத்துக்கு மரம் தாவும்; குரங்குமல்ல. பட்டை தீட்டியிருக்கும்; சாமியாருமல்ல. அது என்ன?

4. தகட தகட மரம்; தண்ணீரிலேயே ஊறும் மரம்; தச்சர் இழைக்காத மரம். அது என்ன?

— ப. காளிதாசன்,
நீர்விளங்குளம்.

விடை :
1. கடல் அலை
2. நாட்காட்டி
3. அணில்
4. நாக்கு

மரகதப் பேழையில் மாணிக்கங்கள்!

1. மரக்கிளையில் ஒரு அடுக்கு மாளிகை. புத்தியுடன் திறந்தால் அடிநாக்கு தித்திக்கும். அது என்ன?

2. பச்சைப் பந்தலில் பல பாம்புகள். பிடித்து இழுத்தாலும் கடிக்கத் தெரியாது. அது என்ன?

3. ஆயிரம் பேரைக் கரை சேர்ப்பான். ஆனாலும் ஒருவர் உதவியின்றி நடக்க மாட்டான். அவன் யார்?

4. மரகதப் பேழையில் மாணிக்கப் பரல்கள். அது என்ன?

5. மஞ்சள் குருவிகள் மரக்கிளையில் விளையாடுது. கூடையிலேறி விட்டால் கோடையில் சுகம்தான். அது என்ன?

— ஆர். மணிகண்டன்,
கற்பகம் நகர், சீர்காழி.

விடை :
1. தேன் கூடு
2. புடலங்காய்
3. தோணி
4. மாதுளை முத்துகள்
5. எலுமிச்சம் பழம்.

1. ஐவருடனே பிறந்தான் தருமனல்ல. அதில் ஒருவன் சாட்சி சொல்வான். அவன் யார்?

2. பல் இல்லாத வெள்ளையன் வாய் விட்டுச் சிரிக்கிறான். அது என்ன?

3. நெட்டி இல்லாத வட்ட இலை. அது என்ன?

4. பாலாற்றில் கறுப்பு மீன் — அது என்ன?

— சிவபெருமாள்,
இரணியல், குமரி
மாவட்டம்.

விடை :
1. விரல்கள்
2. பருத்திக்காய்
3. அப்பளம்
4. கண் — கருவிழி

1. தோலை உரித்தாலும் அழமாட்டான். ஆனால் உரித்தவரை அழ வைத்து விடுவான். அவன் யார்?


2. புறப்பட்ட இடம் தெரியும், போய்ச் சேருமிடம் தெரியாது. அது என்ன?

3. சின்னஞ்சிறு வீட்டில் சிப்பாய்கள் பல பேர். அது என்ன?

4. வெளியில் விரியும், வீட்டில் சுருங்கும். அது என்ன?

— கே. சத்யா,
பெரியதச்சூர்,
திண்டிவனம்.

விடை :
1. வெங்காயம்
2. புகை
3. தீப்பெட்டி
4. குடை.



நாடகம் போடுகிறோம்!

✉ விறு விறுப்பு என்றால் என்ன என்று 'ஒன்பதாம் வீடு' தொடர் கதையை படித்தவர்களுக்குத் தான் தெரியும். அதிக பக்கங்கள் வந்தாலும் உடனே படிக்கச் செய்து விடுகிறது.

– எம். நிலாஜான்,
எம். ஸ்ரீனான், மில்ஹான்,
மிப்ரா, முன்ரித், சலான், மபாஸ்
இலங்கை

✉ 'அமேசான் காட்டிற்குப் போகலாம்' என்ற கதை எங்களை மட்டுமின்றி எங்கள் பள்ளி ஆசிரியர்களையும் கவர்ந்து விட்டது. இந்த வருட ஆண்டு விழாவில் இதை நாடகமாக போடப் போவதாக ஆசிரியர் சொல்லியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

– சிவகண்மணி,
ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி,
கருப்பம்புலம்.

✉ பள்ளி மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் அறிவியல் செய்திகள், துணுக்குகள் அதிகம் இடம் பெறுவது பாராட்டத் தக்கது.

– எம். சையத் இலியாஸ், பி.காம்,
விருத்தாசலம்.

✉ பீவர்கள் பற்றிய செய்திகள் சுவாரசியமாக இருந்தது. எனக்கு கோகுலத்தில் படித்த பின்தான் இப்படி ஒரு விலங்கு இருப்பதே தெரிய வந்தது.

– ரா. ஜெபா,
ஒன்பதாம் வகுப்பு,
தோப்பாளையம், அரசினர் மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
வேலூர்.

✉ 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்ற பாரதியின் எண்ணத்தை அனைவரிடமும் ஏற்படுத்தும் வகையில் இருந்தது 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்ற கதை.

– ப. ராமகிருஷ்ணன்,
காயக்காடு, அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம்.

✉ டால்ஃபின்களின் குணங்களை அறிந்து கொண்டதும் அதைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அதிகமாகி விட்டது. அடுத்த முறை சென்னை வந்தால் டால்ஃபின்களை கண்டிப்பாகப் போய்ப் பார்ப்பேன்.

– கே. மலர்விழி, எட்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, குடவாசல்.


✉ சிறிய கதையானாலும் 'முயற்சி' படக் கதை சொன்ன கருத்து மிக முக்கியமானது. ஜெயராஜின் படங்கள் அருமை!

– வி. சாரதி, ஏழாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, பெரியகுளம்.

✉ நூறு கோடி ரூபாய்க்கு காப்பீடு செய்த ரொனால்டோவின் கால்கள் அதிக கோல்களைப் போடாவிட்டாலும் ரசிகர்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்று தங்கக் கால்பந்து பரிசு பெற்றது எனக்கு ஆறுதலாக இருந்தது.

– கா. பிரபு, அருப்புக்கோட்டை.


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



மறுபாதி...?



புனுகு எப்படி கிடைக்கிறது?



புனுகுப் பூனையிலிருந்து புனுகு எடுக்கப்படுகிறது. இப் பூனை இந்தியாவில் பஞ்சாப், சிந்து அல்லாத மற்ற இடங்களில் காணப்படுகிறது. புனுகு என்னும் வாசனைப் பொருள்களை பெறுவதற்காக இது வளர்க்கப் படுகிறது. காட்டில் வாழும் புனுகு பூனைகள் புதர்களில் மறைந்து வாழும். பழங்கள், கிழங்குகள், சிறு பூச்சிகளை உண்டு வாழும். ஆப்பிரிக்கா சீனா, மலேயா முதலிய நாடுகளில் இது காணப்படுகிறது. இதில் பல இனங்களுண்டு.

உங்களுக்கு தெரியுமா? என்ற நூலிலிருந்து.

— பிரேமா, சென்னை

"காகம் குளிக்காது ஏன் தெரியுமா?"

"அதான் 'கரை'யுமே!"

— ஜி. குமரேசன்
பாண்டமங்கலம்



பிருந்தாவனம்

எல்லோரும்
கை
வைத்தால்
மண் வீடு
என்னாவது?



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

